கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri

5 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 15 திங்கட்கிழமை (01.09.2003) தொலைபேசி - 2223378 ஒலி 2256

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# புலிகள் முன்வைக்கும் திட்டவரைபு ரணிலுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும்

## அரச வட்டாரங்கள் தகவல்

(அரசியல் நிருபர்)

வடக்குக்கிழக்கில் உடனடியாக புனர்வாழ்வு புனரமைப்புப் பணி ளை மேற்கொள்வதற்கென அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர் ாகத்தில் சட்டம் ஒழுங்கை பேணக்கூடிய அதிகாரங்கள் இடம் ற வேண்டும் என பரிஸில் முன்வைக்கப்பட்ட திட்டவரைபில் டுதலைப் புலிகளின் சட்டவல்லுநர்கள் வலியுறுத்திக் கூறியிருப்பது தமர் ரணில் விக்கிரமசிங்காவை பெரும்சங்கடத்தில் ஆழ்த்தியுள் தாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தடைப்பட்டுள்ள சமாதானப் சுவார்த்தையை மீண்டும் ஆரம் தும் நோக்குடன் விடுதலைப் களிடம் அரசு சமர்ப்பித்திருந்த டைக்கால நிர்வாக சபை தொடர் ா மூன்றாவது திட்டவரைபை தலைப் புலிகள் கடந்த வாரம் ஸில் கூடி ஆராய்ந்து ஏற்கனவே சைக்குள்ளான சட்டம் ஒழுங் ப் பேணக் கூடிய அதிகாரங் ளைக் கொண்ட திட்டவரைபை ாரித்திருப்பதாக வெளிவந்துள்ள ய்திகளை அடுத்து பிரதமர் தர்ம ங்கடமான நிலைக்குத் தள்ளப்பட் ள்ளார் என்று தெரிவிக்கப்படுகின் து.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு டைக் கால நிர்வாகத்தை வழங்கி தனி இராட்சியம் ஒன்றை உருவாக்கு வதற்கு பிரதமர் வழிவகுத்துள்ளார் என்ற எதிர்க் கட்சிகளின் பிரசாரம் ஒருபுறம் இருக்க தற்போது ஐக்கிய தேசிய முன்னணி கூட்டணிக் கட் சிகளுக்குள்ளேயும் கிளம்பியுள்ள எதிர்ப்புக்களையும் பிரதமர் சமா ளிக்க வேண்டியுள்ளது. இந் நிலை யில் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான டிரோன் பெர்னாண்டோவை ஜனாதிபதி மாளிகைக்கு நேரடியாக அழைத்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு தான் நட வடிக்கை எடுத்து வருவதாகவும், அதற்கு உங்களைப் பிரதமராக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனநாயக மரபிலான நிகழ்வே பொங்கு தமிழ் எழுச்சி

### அமைச்சர் வஜிர அபயவர்த்தன செவ்வி

(லண்டன்)

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு ஜனநாயக மரபிலானதொரு கலாசார நடவடிக்கை. இதில் அரசாங்க ஊழி யர்கள் கலந்துகொ[illegible]

இவ்வாறு பொதுநிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபய வர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

எதிர்வரும் 24ந் திகதி வவுனியா வில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

(10ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதக் குழுக்களாக மாறுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்!

### மு.கா.செயலாளர் நாயகம் ஹசன் அலி

(கொழும்பு)

கிழக்கு மாகாண முஸ்லிம் மக் களின் பாதுகாப்பிற்காக முஸ்லிம் இளைஞர் ஆயுதக் குழுக்களை உரு வாக்கி வருகின்றனர் என்ற குற்றச் சாட்டுக்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம, ஹசன் அலி முற்றாக நிராகரித்துள் ளார்.

இது தொடர்பாக ஹசன் அலி மேலும் தெரிவித்திருப்பதாவது,

கிழக்கு மாகாண முஸ்லிம் இளை ஞர்கள் ஆயுதக் குழுக்களை உரு வாக்கி வருகின்றார்கள் என்று குற் றஞ்சாட்டுவதன் மூலம், சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பு அலைகளை முஸ்லிம் மக்கள் மீது ஏற்படுத்த முனைகிறார்கள்.

ஒஸாமா பின்லேடன், சதாம் ஹுசேன், போன்றவர்களைப் பயன்படுத்தி கிழ க்கு மாகாண முஸ்லிம் இளைஞர் கள் ஆயுதக் குழுக்களை உருவா க்கி வருகின்றனர் என்ற கூற்றில் எவ்வித உண்மையும் இல்லை. இந் நிலையில் கிழக்கு மாகாண முஸ் லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனு மதிக்கமாட்டாது என்று கூறிய ஹசன் அலி, ஜனநாயக வழி முறைகள் மூலமாகவே முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெறமுடியும் என்ப தையே முஸ்லிம் காங்கிரஸ் கொள் கையாகக் கொண்டுள்ளது என்று கூறினார். (ம)

## மக்கள் போக்குவரத்துக்கு மன்னார் மடு வீதி திறப்பது பற்றி இன்று தீர்மானிக்கப்படும்

(கொழும்பு)

மன்னார் மடுவீதியை மக்களின் போக்குவரத்துக்காகத் திறந்து விடுவது தொடர்பாக இன்று நடைபெறவுள்ள கூட்டத்திலேயே இறுதித் தீர்மானம் எடுக்கப் படவுள்ளதாக மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இக் கூட்டத்தில் இராணுவ உயரதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

மடு, பொரியமடு சின்னப் பண்டிவிரிச்சான், பெரிய பண்டிவிரிச்சான், கீரிசுட்டான், வளையன் கட்டு, தம்பனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார்7500 க்கும் மேற்பட்ட மக்கள் இப் பாதை போக்குவரத்துக்கு திறந்து விடப்படாமையால் சுமார்

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் ஆதரவே விடுதலைப் புலிகளின் பலம்

### குட்டி சிறி படையணித் தளபதி பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசும் சர்வதேச மும் விடுதலைப் புலிகளை பயங் கர வாதிகள் எனக் கூறி அழித்து விட முனைந்த போதெல்லாம் அவர்கள் தமிழினத்தின் விடுதலைக் காகப் போராடும் ஓர் விடுதலை அமைப்பு என்பதை உலகறியச் செய்து எம்மை வளர்த்தவர்கள் தமிழ் மக்கள்தான்.

இவ்வாறு குட்டி சிறி மோட்டார் படையணியின் துணைத் தளபதி அமுதன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்ட பத்தில் நடைபெற்ற சிற்றூர்திச் சாரதி கள் மற்றும் நடத்துனர்கள் உரிமை யாளர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற் றிய போதே அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் சிற்றூர்திச் சங்கங்களின் இணையத் தலைவர் கெங்காதரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ் வில் தொடர்ந்தும் அவர் உரையாற் றுகையில்,

எம் இனம் இனவாத சக்திகளி னால் அடக்கப்பட்ட போதும், அரசி யல் உரிமைகள் பறிக்கப்பட்ட போதும் தோன்றிய இந்த விடுதலைப போராட் டத்தை பயங்கரவாதமெனக் கூறி அழித்து ஒழிக்க முற்பட்ட இலங்கை யின் இனவாத அரசிற்கு விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர் எனவும், இனத்தின் விடுதலைக்காகப் போராடும் அமைப்பு எனவும் உலக

(10ம் பக்கம் பார்க்க)

## முப்படைகளையும் தயாராகுமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவு!

(திருகோணமலை)

முப்படையினரையும் தயார் நிலையில் இருக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன படை உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட் டுள்ளார்.

திருகோணமலை கடற்படைத் தளத்தில் பயிற்சி முடித்து வெளியே றிய படையினர் மத்தியில் உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய கடற்படை அணிக்கு பயிற்சி வழங்கப்பட்டு பயிற்சி நிறைவு விழா அண்மையில் திருமலைத் தளத்தில் இடம் பெற்றது.

இவ் அணியில் 61 கடற்படை அதிகாரிகளும், 40 சிப்பாய்களும் பயிற்சியை நிறைவு செய்து வெளி யேறியுள்ளனர்.

அங்கு மாரப்பன தொடர்ந்து உரையாற்றுகையில்;

நாட்டில் சமாதான முயற்சிகள் தானே இடம் பெற்று வருகின்றன என நினைத்து படையினர் சோர் வடைந்திருக்கக் கூடாது. எந்நேரத் திலும் எதுவும் நடக்கலாம்.

எனவே முப்படையினரும் எப் பொழுதும் உசார் நிலையிலும் தயார் நிலையிலும் இருக்க வேண் டும்.

படையினருக்கான உயர்ந்த சலுகைகள் அரசால் தொடர்ந்தும் செய்யப்படும். படையினர் நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் மிகவும் விளிப்பாகச் செயற்பட வேண்டிய தருணம் இதுவேயென்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் திருமலையில் இன்று மறியல்

(திருகோணமலை)

வடக்குக் கிழக்கு மாகாண பாட சாலைகளில் கடமையாற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் இன்று திருகோணமலையிலுள்ள வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விப் பணி மனை முன்பாக மறியல் போராட் டத்தில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த பத்து வருடங்களாக பகுதி நேர ஆசிரியர்களாக கடமை யாற்றும் தமக்கு நிரந்தர நியமனம் வேண்டுமென்று வலியுறுத்தியே ஆங்கில ஆசிரியர்கள் இப்போராட் டத்தில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த 25ந் திகதி இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதும் இன்று மாகாணக் கல்விப் பணிமனை வரை போராடடம் விஸ்தரிக்கப்படவுள்ளது. (இ)

# விடுதலைப் புலிகளை தமிழர் விடுதலைக் கூட்டணி விமர்சனம் செய்வது ஏற்புடையது அல்ல

## அ.விநாயகமூர்த்தி எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இன்று உலகரீதியில் தனித்துவமான அந்தஸ்தும் அங்கீகாரமும் ஏற்பட்டு வருகின்ற வேளையில் தமிழர் விடு



தலைக்கூட்டணி அவர்களைப் பற்றி விமர்சிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். விடுதலைப்புலிகளை விமர்சிப்பதற்கு கூட்டணிக்கு எந்தவித மான அருகதையும் இல்லை.

இவ்வாறு அகிலஇலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினருமான அப்பாத் துரை விநாயகமூர்த்தி யாழ்ப்பாணத் திலுளள கட்சிச் செயலகத்தில் நேற் றையதினம் நடைபெற்ற ''சமகால அரசியல் நிலை'' பற்றி கட்சி உறுப் பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரி வித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பொன் னம்பலம் கஜேந்திரகுமார், மாவட்ட அமைப்பாளர் சீ.வீ.கே.சிவஞானம ஆகியோரும் பங்குபற்றியிருந்த இக கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தொடர்ந்தும் பேசுகையில்,

இன்றைய நிலையில் தமிழீழ விடு தலைப்புலிகள் அமைப்பினை கனடா, அமெரிக்கா, பிரிட்டன் நோர்வே, சுவீடன் போன்ற நாடுகள் அங்கீ கரித்துள்ள நிலையில் தமிழீழ விடு தலைப்புலிகளை கூட்டணியினர் விமர்சித்து வருவது ஏற்புடையதல்ல. கடந்த இருபது வருட காலமாக என்னவிதமான அரசியலைச் செய் தார்களோ அதையேதான் இன்றும் செய்யப்பார்க்கிறார்கள். தமிழ் இனத் தின் பொதுநன்மையை கருத்தில் கொண்டு தமிழர் விடுதலைக் கூட் டணியினர் இத்தகைய நாடகங்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அப்படியான அரசியலை செய்ய வேண்டாம் என அகில இலங கைத் தமிழ்க்காங்கிரஸ் கோரிக்கை விடுக்க விரும்புகின்றது.

மேலும் நாட்டில் ஒரு தேர்தலை நாம் எதிர்கொள்ள வேண்டிய சூழ் நிலை உருவாகி வருகின்றது. இந்த வகையில் பொதுமக்கள் எமது நிலைபற்றிப் புரிந்துகொள்ள வேண் டும். நாம் விரும்பினால் என்ன. விரும்பாவிட்டால் என்ன நாம் எமது கட்சியில் போட்டியிடவேண்டிய நிலை உருவாகலாம். தேர்தலுக்கு நாம் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். நாம் கிராமம் கிராம மாகச் சென்று பிரசாரம் செய்ய வேண்டும்.

கூட்டமைப்பினர் அண்மையில் ஜனாதிபதி சந்திரிகாவைப் பல தடவைகள் சந்தித்துப் பேசியுள்ள தாக ஊடகங்கள் மூலம் அறிந் துள்ளேன். ஆயினும் நானும் கூட் டமைப்பில் இருக்கின்ற போதிலும் கூட இதுவிடயம் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. ஜனாதிபதி சந்திரிகா நிதானமற்றவர். அரசின் ஆட்சியை மாற்றுவதிலேயே குறியாக இருக் கின்றார்.

ஜனாதிபதியின் ஆலோசகரான கதிர்காமர் யாரைப் பிரதிநிதித்துவப் படுத்திப் பாராளுமன்றத்தில் இருக் கின்றார் என்பது தெரியவில்லை. அண்மையில் இவர் இந்தியாவிற்கு சென்று ஏதோவெல்லாம் ஆலோசனை கூறியிருக்கின்றார். ஆனாலும் இவ ரது யோசனைகளை இந்தியா ஏற் றுக்கொண்டதாகத் தெரியவில்லை. விடுதலைப்புலிகளைப் பொறுத்த மட்டில் அவர்கள் இந்தியாவுடன் நட்புறவை வளர்க்கவே விரும்புகின் றார்கள் என்றார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம் பலம் கஜேந்திரகுமார் அங்கு உரை யாற்றும்போது,

கிழக்கு இலங்கையில் அரசாங் கம் 550போரை பொலிஸ் படைக்கு திரட்டுவது என்பது இடைக்கால நிர் வாகத்தில், பொலிஸ் அதிகாரத்தை இல்லாமல் செய்வதையே உள் நோக்கமாகக் கொண்டுள்ளது என நாம் கருதுகின்றோம். இதனால் நாம் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வர்கள் அல்ல. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைக் கொச் சைப்படுத்தும் விதத்தில் முஸ்லிம் தரப்பினர் செயற்பட்டு வருவது கவ லைக்குரிய விடயமாகும்.

தமிழ்மக்கள் நீண்டகாலமாக போராடி தமது சுயநிர்ணய உரி மையை வென்றெடுக்கும் வேளை யில் இவ்வாறு முஸ்லிம் தரப்பினர் செயற்பட்டு வருவதால்தான் முரண் பாடுகள் ஏற்பட்டுவருகின்றன. முஸ் லிம் மக்கள் 70சதவீதம் பெரும் பான்மையாக வாழ்கின்ற தென்னி லங்கையில அவசியப்படாத பொலிஸ் பாதுகாப்பு சிறுபான்மையாக வாழ் கின்ற கிழக்குப் பகுதிக்கு மட்டுமே ஏன் அவசியமாகின்றது?

நீண்ட காலமாக சிங்களப் பேரினவாதத்தினால் அடக்கி ஆளப் பட்ட தமிழினம், தனக்குச் சிறுபான்மை யாகவுள்ள முஸ்லிம்களுக்கு எந்த விதமான துரோகங்களையும் செய்ய முற்படாது என அவர் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்ட அரசியல் அமைப்பாளர் சீ.வீ.கே.சிவஞானம் அங்கு பேசும் போது,

தமிழீழ விடுதலைப் போராட்டத் தினை கடந்த இருபது வருடங் களாக எவ்வித தொய்வும் இன்றி தொடர்ச்சியாக முன்னெடுத்து வருப வர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மட்டுமே. ஆதலால்தான் அகிலஇலங்கை தமிழ்க்காங்கிரஸ் அவர்களை தமிழினத்தின் ஏக பிரதி நிதிகள எனக் கூறுகின்றது. பாராளு மன்றப் பிரதிநிதித்துவத்தை மட்டும் கருத்தில்கொண்டு இது தீர்மானிக் கப்படும் விடயம் அல்ல.

அரசியலில் இடம்பெற்றுவரும் நவீனத்துவம் அற்றவர்களுக்கு ஒப்ப நாமும் எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். அந்த வகையில் தான் நாம் தமிழீழ விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள் கின்றோம். அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியும், தமிழீழ விடு தலைப்புலிகளும் ஒன்றே என்று தெரிவித்தார்.

(க-16,4)

## இலங்கை விமானப்படைத் தளபதி பாகிஸ்தான் விஜயம்

(கொழும்பு)

இலங்கை விமானப்படைத் தளபதி எயாமார்சல் டொனால்ட் பெரேரா, பாகிஸ்தானில் உள்ள விமானப் பொறியியல் தளத் தொகுதிக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டுள் ளார்.

பாகிஸ்தானில் உள்ள கம்ரா விமானத் தளத்திற்குச் சென்ற அவர், பாகிஸ்தான் விமானத் தளத் தலை வர் எயார்மார்சல் அவரன்ஸ் சோகானைச் சந்தித்து கலந்துரை யாடியதுடன், அங்கு பழுதுபார்க்கும் வேலைக்காக தரித்து நிறுத்தப்பட்ட இலங்கை விமானப்படைக்குச் சொந்த மான விமானங்களையும் பார்வை யிட்டுள்ளார்.

(க-10)

## தீ விபத்து

(கொழும்பு)

கண்டி டி.எஸ்.சேனநாயக்க வீதி யில் உள்ள இருமாடிக்கட்டடம் ஒன் றில் நேற்று முன்தினம் இரவு தீப்பற் றிக் கொண்டது.

தீயணைப்புப் படையினரும், பொலி ஸாரும் இணைந்து தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்தத் தீ பரவியதற்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை.

இதேவேளை, விக்டோறியா கா டுப் பிரதேசத்திலும் நேற்று முன்தின தீவிபத்து ஏற்பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது. (த்.)

## உமியிலிருந்து மின்சாரம்

(அம்பலாந்தோட்டை)

உமியலிருந்து மின்சாரம் உற் பத்தி செய்ய முடியும் என்று மின் சார நிபுணர் ஒருவர் கருத்து வெளி யிட்டுள்ளார்.

அரிசி ஆலை உரிமையாளர் களுக்கு உமியிலிருந்து மின்சாரம் உற்பத்திசெய்யும் தொழில்நுட்பம் கற்பிக்கப்படவேண்டும்-தேசிய மின் சார ''கிறிட்டிலிருந்து மின்சாரம் பெறாமல் உமியிலிருந்தே தமக்குத் தேவையான மின்சாரத்தை இவர் கள் உற்பத்திசெய்து கொள்ளமுடி யும்.

உமியிலிருந்து மின்சாரம் உற் பத்திசெயவது மட்டுமன்றி வீணாகும உமியையும் பயனுள்ளதாக்க முடி யும் என்று அவர் கூறியுள்ளார். (பி)

## பொதுமக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் வடக்கு செபமாலை மாதா கோவில் வீதி நீண்டகாலம் திருத்தஞ் செய்யப்படாமையால் இவ் வீதியால் பயணம்செய்யும் பாட சாலை மாணவர், பொதுமக்கள் பலரும் பெரிதும் சிரமமுறுகின்றனர்.

இதுகுறித்து உரியவர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்தும்கூட எது வித பயனும் இல்லை என அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வீதி சுன்னாகம பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ் மாவட்டம்

## செப்ரெம்பர் - 01- 07

☼ மீளக்குடியமர அல்லது தொழில் நிமித்தம் புதிய இடத்திற்குச் செல்லும்போது அவ்விடம் ஆபத்தானதா என அவ்வூர் வாசிகளிடமிருந்து கேட்டு அறிந்து கொள்வோம்.

ஆபத்தான பிரதேசங்களை தவிர்த்து நடப்போம்.

## ஆபத்தான பிரதேசங்களாவன, கைவிடப்பட்ட

- இராணுவ மண் அரண்கள் (பண்ட்)
- பதுங்கு குழிகள்
- வயல் நிலங்கள்
- காவல் நிலைகள்
- வீடுகள்
- இராணுவ எச்சங்கள் உள்ள இடங்கள்

மிதிவெடி அபாய எச்சரிக்கைப் பலகை போடப்பட்ட இடங்கள்

முள்ளுக் கம்பிச் சுருள்கள் உள்ள இடங்கள்









ஆபத்து நிறைந்த பூமியில் அவதானமாக நடப்போம்.

மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

(C/6601)

## அன்றும் இன்றும்

# காலம் கடந்து கண்திறக்கும் ஆசாமிகள்

கொழும்பில் நடைபெறவிருந்த சிறுவர் நிகழ்வொன்றை விடுதலைப்புலிகளுக்கு சார்பான பொங்குதமிழ் நிகழ்வென தென்னிலங்கை பேரினவாதிகள் பிரசாரம் செய்து குழப்ப முனைந்து தொடர்பாக சில தினங்களுக்கு முன் செய்திகள் வெளியாகியிருந்தன.

நாட்டில் தமிழருக்கெதிராக இனவாதக் குழப்பங்களை கட்டவிழ்த்து விடுவதற்கு முன்னதாக, தமிழ்மக்கள் என்னசெய்தாலும் அதற்கு இனவாத சாயம் பூசி சிங்களவர் மத்தியில் பிரசாரம்செய்வதென்பது அங்குள்ள இனவாதிகளின் பாரம்பரியமான பழக்கம் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

தமிழ்க்கலாசார விழாவென்றால் என்ன, தமிழ் கோயில் ஒன்றின் வருடாந்தப் பொங்கலாக இருந்தால் என்ன, பாடசாலைக் கூட்டம் என்றால் என்ன அவை தமிழர்களால் நடத்தப்படுமானால் ''நாம் தமிழர்'' கூடுகிறார்கள் என்று பிரசாரம் செய்வது அந்தக் காலத்திலிருந்து அவர்கள் கடைப்பிடிக்கும் முறைதான். இனவாதிகள மட்டுமல்ல தேசிய பத்திரிகைகள் என்று கூறிக்கொள்ளும் ஆங்கில- சிங்களப் பத்திரிகைகளும் இதே கைங்கரியத்தை தான் செய்து வநதன.

1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆயுதப்படைகளினாலும் கொழும்பில இருந்து கொண்டுவரப்பட்டிருந்த காடையர்களாலும் நிகழ்த்தப்பட்டிருந்த அட்டூழியங்கள் கொழும்புப்பத்திரிகைகளில் சரியாக வெளியிடப்படாமல் உண்மைகள் சிங்கள மக்கள் அறியாமல் மறைக்கப்பட்டமை ஒருபுறமிருக்க அச்சம்பவங்கள் பற்றி பாராளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசிய விபரங்களும்கூட முறையாக வெளியிடப்படாமல் மறைக்கப்பட்டன. அதுபற்றி ''மோர்ஜ்'' (mirje) என்ற தன்னார்வ நிறுவனம் ஆய்வுசெய்து வெளியிட்ட பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவித்திருந்தது.

''...யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்த துன்பியல் சம்வங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுக்கள், முறையாகவோ, துல்லியமாகவோ ஊடகங்களால்- குறிப்பாக சிங்களப் பத்திரிகைகளால் சிங்கள மக்களுக்கு வழங்கப்படவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பொது நூலகம் தமிழ் இளைஞர்களால் தான் கொளுத்தி எரிக்கப்பட்டதென்று சிங்கள மகக்ள் நீண்ட காலமாக எண்ணி வந்திருந்தார்கள். இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சம்பவங்களின் உண்ஸமயான தன்மை பற்றி சிங்கள மக்கள் முற்றாகவே ஒன்றும் தொியாதவர்களாகவே இருந்துள்ளனர். இன்னமும் கூட அவர்களில் சிலர் அதே கருத்துடன் இருக்கக்கூடும். இலங்கையின் இரண்டாவது பெரிய நூலகம் அரசாங்கப் பொலிஸாரால் தான் எரிக்கப்பட்டது என்பது தெரியாத மக்கள் இன்னும் பலர் இருககக்கூடும்.

''...தவஸ லங்காதீப ஆகிய பத்திரிகைகள் சிங்கள வாசகர்களுக்கு இந்தத் தகவல்களை வழக்காது இருந்தது மட்டுமன்றி, அந்தச் சம்பவங்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி த்தான் காரணம் என்ற அபப்பிராயத்தை உருவாக்கும் வகையில் தலையங்கங்களையும் விஷயங்களையும் தெரிந்தெடுத்து வெளியிட்டிருந்தன...''

இதேபாணியில் இன்றும் கூட நிலைமைகள் திரிக்கப்படுகின்றன.

ஜே.வி.பி., சிஹல உறுமயக் கட்சிகள் மட்டுமின்றி சுதந்திரக் கட்சித்தலைவியும் இதே பாணியில் செயற்படுவதென்பது இன்னொரு குழப்பத்துக்கு வித்திடப்படுகின்றது அல்லது, இராணுவ நடவடிக்கை ஒன்றிற்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றது என்று எண்ண வேண்டிய நிலைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்படுகிறார்கள்.



வடக்கு-கிழக்கை புலிகளுக்கு கொடுத்துவிட்டு, தெற்கை வெள்ளையருக்கு கொடுத்துவிட்டு, ஏனையோரை கடலுக்குள் தள்ளிவிட இன்றைய அரசு முயற்சிக்கிறது என்று ஒரு தலைவர் பேசுகிறார் என்றால், சிங்கள மக்களை இவர்கள் படுமுட்டாள்களாகக் கருதுகிறார்கள் அல்லது இப்படி பேசுவதன் மூலம்தான் அவர்களை திசை திருப்ப முடியும் என்று கருதுகிறார்கள் என்றே எண்ண வேண்டும்.

தமிழர் தரப்பில் முன்வைக்கப்படும் எந்தவொரு நியாயமான கோரிக்கையையும் சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் ஏற்றுக் கொள்வதில்லை.

அந்தக் கோரிக்கையின் மீது போராட்டங்களும் குழப்பங்களும் ஏற்பட்டு சர்வதேச மட்டத்தில் அல்லது உளளுர் அரசியல் மட்டத்தில் திருப்பங்கள் அல்லது நிர்ப்பந்தங்கள் ஏற்படும் போது சுடலை ஞானம் ஏற்பட்டு சில பல காரியங்கள் செய்வார்கள். ஆனால் அவர்கள் எதிர்பாக்கும் எந்தவிதத் தாக்கத்தையும் அவை ஏற்படுத்துவதில்லை.

மலையக மக்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் அன்றைய பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின்தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பறித்துக் கொண்டு ஆயிரக்கணக்கான இந்திய மக்களை நாடு கடத்த முற்பட்டது.

அந்த மக்களின் கடும் எதிர்ப்பின் காரணமாகவும் இந்திய அரசின் முறுகல் நிலை காரணமாகவும் இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து அதில் தகுதி பெறுகிறவர்களுக்கு மட்டும் பிரஜாவுரிமை வழங்குவது என்ற நிலைப்பாட்டை எடுத்து இலட்சக் கணக்கான இந்திய வம்சாவளியினர் நாடற்றவர்கள் என்ற நிலைக்குத் தள்ளப்படும் நிலையை அன்றைய யு.என்.பி. கட்சி உருவாக்கியது.

இந்திய மக்களில் பெரும்பான்மையானவர்களும் தொழிலாளர் வர்க்கத்தினராய் இருந்தமையால் இலங்கை-இந்திய காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடாத இடங்களில் எல்லாம் தொழிலாளர் சார்பான இடது சாரிக் கட்சிகள் வெற்றி பெறும் சாத்தியம் இருந்தமையே இந்திய வம்சாவளியினரின் பிரஜாவுரிமையை யு.என்.பி. கட்சியினர் அன்று பறிபதற்கு காரணமயிருந்தது என்றும் கருதப்பட்டது.

அதன் பிறகு காலமாறுதல் காரணமாக இந்த மக்களின் தயவு தமக்குத் தேவை என்ற நிலை ஏற்பட்டதால் இன்று ரணில் விக்கிரமசிங்கவின் யு.என்.பி. அரசு ஆயிரக்கணக்கான நாடற்ற, அல்லது இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்த மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்க முன் வந்துள்ளது.

இதேவிதமாகத்தான் சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கி, தமிழ்மொழிக்கு சமஅந்தஸ்தை சிங்கள அரசுகள் மறுந்து வந்தன. அதன்விளைவாக நாட்டில் ஏற்பட்ட கலவரங்களும் தார்பபூச்சு ஆர்ப்பாட்டங்களும் இனக் கொலைகளும் சொல்லிமாளாது.

பிறகு தமிழிற்கும் சமநிலை என்று ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை, மத்தியிலிருந்த அரசுக்கு ஏற்பட்டது.

இன்று தமிழருக்கு சுயாட்சி என்ற நிலையை மட்டுமல்ல இடைக்கால நிர்வாகத்தைக் கூட மறுத்து வருகிறார்கள்.

ரணில் அரசு தமிழர்தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதைக கூட பொறுக்காமல் சுதந்திரக் கட்சியின் தலைவியும் நாட்டின் ஜனாதிபதியுமான குமாரதுங்க அம்மையார் அந்தரப்படுகிறார். அவருக்கு ஒத்துதுகிறார் லக்ஷ்மன் கதிர்காமர்-இவர்களோடு சிஹல உறுமயவும் ஜனதா விமுக்தி பெரமுனவும் சேர்ந்து கொண்டுள்ளன. இவர்களுக்கு ஆதரவாக பேரினவாத பத்திரிகைகளும் பின்னணி வாசிக்கின்றன.

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை மறுப்பதும் பின்னர் தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டு வழங்குவதும் பெரும்பான்மைக் கட்சிகளின் வழக்கம் என்ற அளவுகோலை வைத்துப் பார்க்கையில், தமிழ்மக்கள் 50 வருடங்களுக்கு மேலாக அனுபவித்த துனபங்களும், செய்த தியாகங்களும், வடிந்த கண்ணீரும் நீதியை நிலை நாட்டியே தீரும் என்று நம்பிக்கை கொள்ளமுடியும்.

* * *

# திருட்டுகள் பலவிதம்

திருட்டுக்கள் பலவிதம். விலைமதிக்கமுடியாத புராதனச் சின்னங்களைத் திருடுவது அதில் ஒன்று. தமிழ்ப் பகுதிகளில் உள்ள இவ்வாறான பொக்கிஷங்களைத் திருடிக்கொண்டு செல்பவர்கள் இப்பொழுது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இங்கு மட்டுமல்ல உலகெங்கும இம்மாதிரியான புராதன பொக்கிஷங்களைத் திருடும் தொழில் நடைபெற்றே வருகின்றது.

அண்மையில் பிரிட்டனில் உலகப் புகழ்பெற்ற ஓவியர் லியனார்டோ டாவின்சியின் 25மில்லியன் டொலர் பெறுமதியான ஓவியம் ஒன்று திருடப்பட்டிருப்பது பிரிட்டிஷ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

பக்லீச் பிரபுவின் டிரம்லன்றிக் மாளிகையில் 250 ஆண்டுகளுக்கு மேலாக பாதுகாப்பாக இருந்து வந்த ஓவியம் மெடோன்னா வித் தயான் வைன்டர் என்று பெயர் சூடப்பட்டிருந்த (நூல் நெய்பவருடன் அன்னை) இவ் ஓவியம்.

மாளிகையைச் சுற்றிப்பார்க்க வந்திருந்த ஒரு பார்வையாளருடன் சேர்ந்து, பார்வையாளர் போல் காட்டிக்கொண்டு திருடர்கள உள்ளே நுழைந்துள்ளார்கள்.

லியனாடோ டார்வின்சியின் ஓவியம் காட்சிக்கு வைக்கப்பட்டிருநத இடம் வந்தவுடன் ,வழிகாட்டியாக வந்த ஒரு இளம் பெண்ணை கத்தி முனையில் அச்சுறுத்திவிட்டு எச்சரிக்கை ஒலி அமைப்பபையும் செயலிழககச் செய்து விட்டு ஓவியத்தை எடுத்துக்கொண்டு சமயல் அறை யன்னல் வழியாகத் தப்பிச் சென்றுள்ளார்கள்.

மறுமலர்ச்சிக்காலத்தைச் சேர்ந்த இந்த ஓவியம் 250 ஆண்டுகளாக இந்தப்பிரவு குடும்பத்தவர்களிடம் இருந்து வந்துள்ளது.

இந்திருட்டில் 4பேர் ஈடுபட்டிருந்துள்ளனர் என்றும் அவர்கள் பிரயாணம் செய்த கார் இலக்கங்கள் கிடைத்திருப்பதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

* * *

# தக்காளிப் பழத் திருவிழா

புதுவருடம், தீபாவளி, கிறிஸ்மஸ் போன்ற விழாக்களின் போது மக்கள புத்தாடைகள் புனைந்தும், வெடிகள், வாணங்கள் கொளுத்தியும் கொண்டாடுவது வழக்கம் அல்லவா?

இந்தியாவில் கோலி பண்டிகையின்போது வண்ணங்கள் கரைக்கப்பட்ட நீரை மக்கள் ஒருவர் மீது ஒருவர் குறிப்பாக ஆண்கள் பெண்கள் மீதும் பெண்கள் ஆண்கள் மீதும் தெளித்து மகிழ்வதுண்டு.

தமிழ் நாட்டில் வசந்த விழா வென்று இவ்வாறு ஒருகொண்டாட்டம் முன்னர் இருந்ததாகத் தெரிகின்றது. கேரளாவில் ஓணம் பண்டிகை இவ்வாறான ஒன்றாக கருதப்படுகின்றது.

இதேவிதமான பண்டிகை ஒன்று ஸ்பெயின் நாட்டில் நடைபெறுகின்றது. இதில் வேடிக்கை என்னவென்றால் நன்றாகப் பழுத்த தக்காளிப்பழங்களை கொண்டு மக்கள் ஒருவருக்கொருவர் அபிஷேகம் செய்து கொள்வதுதான்.

ஜெனரல் பிரான்சிஸ்கோ கோல்ட்ரான் சனோன் என்பவரின் சர்வாதிகார ஆட்சிக்காலத்தில் 1940 ஆம் ஆண்டளவில் தான் இந்தக்கொண்டாட்டம் நடைமுறைக்கு வந்ததாகக் கூறப்படுகின்றது

அண்மையில் ஸ்பெயின் நாட்டில் புனோல் என்ற சிறிய நகரில் இவ்விழாசிறப்பாக கொண்டாடப்பட்டதாக செய்திகள் வந்துள்ளன.

ஆயிரக்கணக்கான மக்கள் புனோல் நகரில் கூடி தக்காளிப்பழங்களை ஒருவர்மீது ஒருவர் வீசி எறிந்து ''டொமாட்டினா'' என்று அழைக்கப்படும் இந்த விழாவை கொண்டாடியிருக்கிறார்கள்.


5டிறக்குகளில் 120தொன் தக்காளிப்பழங்கள் இங்கு கொண்டு வரப்பட்டன. காதைப் பிளக்கும் அளவிற்கு சத்தத்துடன் வெடிகள் கொளுத்தப்பட்டதுடன், கொண்டாட்டம் ஆரம்பமானது. மக்கள் ஒருவருக்கொருவர் தக்காளிப்பழங்களைப் பூசி மகிழ்ந்தனர். பழங்கள் முடிந்ததும் நிலத்தில் ஓடிய பழரசத்தை அள்ளி வீசித்தெளித்து மகிழ்ந்தனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்ட ஆண்கள், தக்காளிப்பழச்சாற்றை அள்ளி இளம பெண்களின் உடல்கள் முழுவதையும் நனைத்து மகிழ்ந்தனர். உளளுர் வாசிகள் தங்கள் வீட்டுச் சுவர்களை பிளாஸ்ரிக் தகடுகளால மறைத்து பழரசம் பூசப்படுவதில் இருந்து காப்பாற்ற முயன்றனர். சுமார் 3500பேர் புனோல் நகரில் இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டனர்.

-அன்பன்

# மண்டைதீவு திருவெண்காடு

# மகா கும்பாபிஷேக சிறப்

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



சிவநேயச் செல்வர்காள்! யாழ்ப்பாண திருநாட்டின் தென்பால் அமைந்த மண்டைதீவு சைவத் தமிழ்ப் பண்பாட்டில் உயர்ந்து விளங்கும் அழகிய கிராமமாகும்.

இக் கிராமத்தின் திருவெண்காட்டுப் பகுதியில் வீற்றிருக்கும் திருவெண்காட்டுச் சித்திவிநாயகப் பெருமானுக்கு இன்று திருக்குடமுழுக்கு நடைபெறும் செய்தி நமக்கெல்லாம் மனமகிழ்வைத் தருகிறது. கருணைக் கடலாகிய திருவெண்காட்டுச் சித்திவிநாயகப் பெருமான் இப் பகுதி மக்களின் காக்கும் கடவுளாக வீற்றிருந்து கருணை மழை பொழிகின்றார். அத்தகைய கீர்த்தி மிகுந்த விநாயகனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதன் மூலம் இக் கிராமம் மீண்டும் புதுப் பொலிவு பெறும் என்பதில் ஐயம் இல்லை.

இந்த நல்ல கருமத்தைச் சிறப்புடன் செய்யும் ஆலய தர்மகர்த்தாக்களுக்கும் ஊர் மக்களுக்கும், அந்தண சிவாச்சாரியார்களுக்கும் எமது அருளாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை ஆதீனம்
நல்லூர்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்
ஆதீன முதல்வர்

## இந்து கலாசார அமைச்சரின் வாழ்த்துக்கள்



தீவகத்தின் தலைத்தீவாக விளங்கும் மண்டைதீவு கடந்த யுத்த சூழ்நிலையில் பெரும் பாதிப்புக்களை அனுபவித்துள்ளது. இதனால் அங்குள்ள இந்து ஆலயங்கள் பூசை வழிபாடுகளின்றி பல வருடங்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.


அப்பகுதி மக்களுக்கு பெரும் துன்பங்களை கொடுத்திருந்தது.

எனினும் தற்போதைய சமாதான சூழ்நிலையில் மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று மகாகும்பாபிஷேகம் இடம்பெறுவது அவ்வூர் மக்கள் சைவத்தின் மீதும் விநாயகன் மீதும் கொண்ட அளவு கடந்த பற்றுதலை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆலய அறங்காவலர் திரு பொ.வி.திருநாவுக்கரசு அவர்கள் ஆலய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுள்ளமையை ஆலயத்தின் எழில்மிகு தோற்றம் சான்றுபகிருகிறது.

விநாயகனின் மகாகும்பாபிஷேகம் சிறப்புற எமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.மகேஸ்வரன்
இந்து கலாசார அமைச்சர்



## செஞ்சொற் செல்வர் வழங்கிய வாழ்த்துச் செய்தி



*அத்தி முகவனை நித்தம் நினைப்பவர்*
*சித்தம் மகிழ்வொடு முத்தி பெறுவரே*

அருள் நிறைந்த திருப்பதி மண்டைதீவுப் பெரும்பதி கடையிற் சுவாமிகள் காலடிபட்ட கருணைப் பதியில் பேரருள் பாலிக்கின்ற திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயம் மகா கும் பாபிஷேகம் காண்பது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சைவப்பற்று மிக்க சான்றோர் வாழ்ந்த புண்ணிய பூமியில் திருவருள் பாலித்த திருக்கோயில் போரின் அனர்த்தங்களால் அழிந்துபோய் இருந்தது கண்டு பலரும் வேதனைப்பட்டனர்.

இன்று இத் திருக்கோவில் விநாயகரின் அடியார்களால் மீளப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுப் புதுப்பொழிவு பெற்றிருப்பது அறிந்து சைவ அன்பர்கள் பெரும் ஆறுதல் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஈழத்துச் சித்தர் பரம்பரையினர் பெரிதும் போற்றுகின்ற மண்டைதீவு திருவூருக்குப் பலவிதமான மகிமைகள் உண்டு. மண்ணினாலும், மாசற்ற வாழ்வினாலும் தனித்துவமான சிறப்புக் கொண்ட இத் திருவூர் கற்பக தருவாகிய பனையைக் கடவுளாக மதிக்கும் பெருவூர்.

இத் திருவூரின் வரலாறு இவ் ஆலய கும்பாபிஷேகத்தோடு மீண்டும் மக்கள் மனதில் வேரூன்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ் ஆலயத்தைக் கட்டியெழுப்புவதில் அக்கறை கொண்ட அன்பர்கள் அனைவரையும் இத்தருணத்தில் நன்றியுடன் வாழ்த்தி வணங்குகின்றேன்.

திருவெண்காட்டானின் குடமுழுக்கு நாளோடு எம் திருநாட்டில் நிரந்தர விடிவு ஏற்பட எல்லோரும் இறைஞ்சுவோமாக!

செஞ்சொற் செல்வர்
**ஆறுதிருமுருகன்**
ஆசிரியர்.

## ஆலயத்தின் வரலாறு

மண்டைதீவின் மையப்பகுதியில் அமைந்துள்ள திருவெண்காடு எனும் குறிச்சி அக்காலத்தில் பற்றைகளும், திருக்கொன்றை, வேம்பு, முதலிய மரங்களும் அடர்ந்த காட்டுப் பகுதியாகத் திகழ்ந்தது. இக்காட்டில் ஓர் பெரிய ஆலய விருட்ஷமும் காணப்பட்டது. இக்கிராமத்தின் வட பகுதியில் வசித்த மக்கள் தென்பகுதிக்கு இக்காட்டினூடாகவே சென்று வந்தார்கள். அவர்கள் சென்ற இப்பாதை அந்த ஆலவிருட்ஷத்தின் அருகாமையில் அமைந்திருந்தது.

ஒரு நாள் மாலை நேரம் ஐயம்பிள்ளை உடையார் இப்பாதை வழியாகச் சென்று அவ்வாலவிருட்ஷத்தைக் கடந்து கொண்டிருக்கையில், தன்னை பின்பக்கத்தினால் ஏதோ ஒன்று பிடித்து இழுப்பது போன்ற பிரமை அவருக்கு ஏற்பட்டது. அவர் திணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தபோது ஆலவிருட்சத்தின் கீழ் பெரிய வெள்ளை யானை ஒன்று தன் துதிக்கையை, அவரை நோக்கி நீட்டிய வண்ணம் நின்றது. இதைக் கண்ணுற்ற ஐயம்பிள்ளை உடையார் ஆச்சரியப்பட்டார். இதன் போது யானை ஆலமரத்தின் மறுபக்கம் சென்று மறைந்து விட்டது. இச்சம்பவம் அவருக்கு ஓர் அதிசயமாகவும், மிகுந்த பயமாகவும் இருந்தது.

எனினும் அவர் அவ்யானையைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் அச்சுற்றாடலில் தேடினார். ஆனால்அவரால் யானையை மீண்டும் காண முடியவில்லை. அவர் இச்சம்பவத்தைத் தனது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவித்து அவர்களுடன் கலந்து ஆலோசித்தார். அவர்கள் எல்லோரும் பிள்ளையார் தான் இவ்வாறு காட்சி அளித்தார் என்ற கருத்தைக் கூறினார்கள். இதன் காரணமாகவே அவர் அவ்வால விருட்ஷத்தின் அருகில் பிள்ளையார் ஆலயத்தை அமைத்தார். அதுவே திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயமாக சிறப்புற்று விளங்குகிறது.

திருவெண்காடு சித்திவிநாயகர்
தேவஸ்தானம்

**பொ.வி.திருநாவுக்கரசு**
தர்மகர்த்தா

S.P.O
என்ரபிறைசஸ்
110 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

ஹரிணி காட்வெயர்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ரூபன் புத்தகசாலை
605, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்

பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்
104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 021 - 222 2386

போட்டோ ரவி அன் வீடியோ
139, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 0777 - 110015, 0776 - 048909

ஈஸ்வரபகவான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 021 - 222 2350

# இலங்கை இனப்பிரச்சினைக்கு

# சமஷ்டி முறை மூலமே தீர்வு காண வேண்டும்

# இந்திய அரசின் உதவியும் அவசியம் தேவை

## பி.பி.சி.தமிழோசைக்கு யோசப் எம்.பி. தெரிவிப்பு

(லண்டன்)

**இலங்கையில் ஒற்றையாட்சி முறை அமைப்பு இருப்பதால் தான் பெரும்பான்மையினத்தவரான சிங்கள மக்கள் சிறுபான்மையினததவரான தமிழ்மக்களை அடக்கியாளுகின்றனர்.**

**இந் நிலைமையை மாற்றி தமிழர்களின் பிரச்சினைகளைத தீர்ப்பதனால் இலங்கையில் சமஷ்டி அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். இதற்கு இந்திய அரசின் உதவி அவசியம்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியுக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் யோசப் பரராஜ சிங்கம்.

பல தேசிய இனப்பரவல் மற்றும் தேசக் கட்டுமானம் தொடர்பாக இலங்கை அரசசார்பு நிறுவனமான "இம்பாட்" இந்தியத் தலைநகர் டெல்லியில் நடத்திவரும் 4 நாள் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக டெல்லி சென்றுள்ள அவர் அங்கிருந்து பி.பி.சி.தமிழ்ச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

இலங்கையில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரிற்கும் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் "சமஷ்டி"அமைப்புப் பற்றித் தெரியாது.

அவர்கள் "சமஷ்டி அமைப்பு" என்பதை நாடு பிரிந்து செல்வதற்கு வழிவகுக்கும் என கருதுகிறார்கள்.

எனவேதான் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து அவர்களுக்கு சமஷ்டி முறை பற்றி விளக்குவதற்காக "இம்பாட்" நிறுவனம் டெல்லியில் மேற்படி நான்கு நாள் கருத்தரங்கு ஒன்றை நடத்தத் தீர்மானித்தது.

சமஷ்டி அமைப்பு இந்தியாவில் பிரிவினையை ஏற்படுத்தாதது மட்டுமல்ல,இந்தியாவின் ஒருமைப்பாட்டை பேணுகின்றது.

சமஷ்டி என்பது பிரிவினை அல்ல. சமஷ்டியின் மூலம் பல இன மக்கள் வாழுகின்ற நாட்டிலே ஒரு நிலையான அரசியலை ஏற்படுத்தி பல இன மக்களும் சம உரிமையுடன் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்தலாம் என்கின்ற நிலைப்பாட்டை விளக்கிக் கூறுவதுதான் இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம் ஆகும்.

இதேசமயம் இலங்கையில் அமைக்கவிருக்கும் சமஷ்டி அமைப்பு, இந்திய மத்திய மாநில அரசு உறவுகளைத் தாண்டிய ஒரு நிலையில் இருக்கின்றது.

இதற்கான காரணம் என்னவென்றால், இந்திய சமஷ்டி அமைப்பிற்கும் இலங்கையில் உள்ள தமிழர்கள்,சிங்களவர்களுடைய பிரச்சினைகளுக்கும் மிகப்பெரிய வேறுபாடுகள் இருக்கின்றன.

இந்தியாவில் அரசியல் அமைப்பு ஏற்படுத்திய பின்னர் தான் சமஷ்டி அமைப்பு உருவாகியது.

### சிங்களவர் ஆளுகின்றனர்

ஆனால் இலங்கையில் அப்படியல்ல. ஒற்றையாட்சி முறையினால் சிங்களவர்கள் ஆளுகின்றனர். தமிழர்கள் ஆளப்படுகின்றனர்.

எனவே, இந்தியாவிலுள்ள சமஷ்டி அமைப்புப் போல் அல்லாது அதற்கு அப்பாற்பட்ட சமஷ்டி அமைப்பு ஒன்றைத்தான் இலங்கையில் உருவாக்க வேண்டும்.

இதேவேளை, இலங்கைத் தமிழர்களின பிரச்சினையை அந்தப் பிராந்தியத்தின் பெரிய நாடான இந்தியா தீர்த்து வைக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் கூட, தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும் என்பதை மறைமுகமாகக் கூறியிருக்கிறார்கள்.

### ஏமாற்றி வந்துள்ளன

இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் ஆட்சிப் பீடமேறிய ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் மாறி மாறி தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறி ஏமாற்றி வந்துள்ளன. இதனை இந்தியா நன்கு அறிந்து இருக்கின்றது.

எனவே, தொடர்ந்தும் தமிழர்களை ஏமாற்றாது இலங்கை அரசு தமழர்களின் அபிலாஸ்சைகளை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசி பிரச்சினையைத் தீர்க்க இந்தியா உதவ வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இனிமேல் இந்தியா தலையிடாது என்றும, கடந்த காலங்களில் குறிப்பாக இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டமை, ராஜீவ் காந்தி கொலை போன்ற விவகாரங்கள் இந்தியா-இலங்கை இனப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடத் தடையாக இருக்கின்றதாகவும் இந்திய அரசு கூறிவருகின்றது.

இந்த விடயத்தில் நான் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். இலங்கை அரசு செய்த குற்றத்தை இந்தியா மறக்கவேண்டும். தமிழர்களுடைய நல்வாழ்வுக்காக, அவர்களுடைய எதிர்காலத்திற்காக, அவர்களுடைய அரசியலை நிர்ணயிப்பதற்காக இந்திய அரசு உதவ வேண்டும் என்றார். (க-10)

# வலம்புரி நடத்திய தரம் 11 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி முடிவுகள்

1ம் இடம்:- இ.கோகுல்நாத் - யா/ ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி புத்தூர்
2ம் இடம:- கவிதா முருகைய[illegible] பாடசாலை மயிலிட்டி ஆணைக்கோட்டை
3ம் இடம்:- ம.வாணி- யா/ ஸ்ரீ சோமஸ்கந்தக்கல்லூரி புத்தூா

### சான்றிதழும் பாராட்டும் பெறுபவர்கள்

- சி. பிரசாந்தினி-யா/ வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்
- தி. பவிதா-யா/ கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம் காரைநகர்
- அ.சவகலா-யா/கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயம் காரைநகர்
- ஹம்ஷத்வனி கோபாலசர்மா- ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்
- கவிதா கந்தசாமி- யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
- பாலச்சந்திரன் சயந்தன்- யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
- இ.ரவிசங்கர்- யா/ நாவந்துறை றோ.க.த.க.வித்தியாலயம்.
- ஜசிந்தா குமாரசுவாமி- யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்
- கு.ஜனகன்- யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
- ராதிகா சபாரத்தினம்-யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்
- கே.சுமித்திரா- யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
- ஷாழினி இராஜசிங்கம்-யா/ தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
- ஐதுயா கனகசபை -யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்
- விஜயதீபா விக்கினேஸ்வரன் -யா/ நயினாதீவு மகாவித்தியாலயம்
- மைதிலி கந்தையா- யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
- உ.கஸ்தூரி -யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் மானிப்பாய்
- டயனி குணபாலசிங்கம்- யா/ இணுவில் மத்திய கல்லூரி இணுவில்
- றமமிய சிவபாதசுந்தரம்- யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை
- நிரோஷ தயாநிதி- யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
- சி.ஸ்ரீசயந்தினி- யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், மானிப்பாய்
- பாலகௌரி பாலச்சந்திரன்- உடுவில் மகளிர் கல்லூரி
- தா. கஜேந்தினி- யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்
- நாகமுத்து சிவதாசன்- யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை
- செ.கஜானன்-யா/ இந்துக்கல்லூரி
- கா. கேமலாரூபிணி- யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்
- தனபாலசிங்கம் ஜீவிதன்- யா/மகாஜனாக் கல்லூரி
- விக்கினேஸவரி கிருஷ்ணபிள்ளை- யா/மானிப்பாய்மெமோறியல்ஆங்கிலபாடசாலை
- சபிதா ஸ்ரீக்குமார்- யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்க மகாவித்தியாலயம்
- சி.சர்மிளா- யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,மானிப்பாய்
- மேனகா செல்வராசா- யா/மல்லாகம் மகாவித்தியாலயம்
- பா.லக்ஷ்மிப்பிரியா- யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை
- வை.சுபாசினி- தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
- சி. நித்தியா- யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,மானிப்பாய்
- ப. பத்மநிருபா- யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்
- அனுஷா இரத்தினஸ்ரீதர்மன் யா/மல்லாகம் மகாவித்தியால்யம்
- வி.பிரபாசுதன்- கிளி/கண்டாவளை மத்திய மகாவித்தியாலயம் கிளிநொச்சி
- ஸ்ரீபராபரன் தயாபரம்- யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
- துஷ்யந்தி விக்னராஜக் குருக்கள் யா/ஆவரங்கால் நடராஜஇராமலிங்க வித்தியாலயம
- இ.கம்சனா- யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
- தங்கராசா மோகனராஜ்- யா/ஹென்றி அரசர் கல்லூரி இளவாலை
- நகுலேஸ்வரன் வினித்தா- மானிப்பாய் மகளிர் கல்லூரி
- மதுஜா நிர்குணானந்தன் - யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
- எழில் செல்வி கனகசிங்கம் - யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
- சுஜாந்தினி விஜயரத்தினம்-யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
- ஜெ.கயல்விழி-யா/மல்லாகம் மகாவித்தியாலம்
- தினேஷ் கௌரி புஸபராசா யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
- ஜெ.சுதர்சன்-யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
- மு.டிலோஜினி யா/மானிப்பாய் மருதடிஅறநெறிப்பாடசாலை
- இ.சசிதா- யா/ஸ்ரீ சோமஸ்கந்தக்கல்லூரி புத்தூர்
- கயந்தினி கந்தசாமியா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க விததியாலயம்
- செ.சற்சொரூபன்- யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி புத்தூர்
- ஆன் கிரிஸ்ரபெல்-யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
- சிவனேஸ்வரன் றெஜிந்தன்யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம
- வித்தியா கணேசலிங்கம்யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
- மயூரினி தெய்வேந்திரம்யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் **ஈழத்து எழுத்தாளர் அமரர் கணபதி கணேசன்** அவர்கள் ஞாபகார்த்தமாக வழங்கப்படும்

பரிசளிப்பு வைபவம் **21.09.2003** ஞாயிற்றுக்கிழமை மு.ப.10மணிக்கு வலம்புரி கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கிறது.

பரிசில்களுக்குரியவர்களும் சான்றிதழுக்குரியவர்களும் விழாவிலே கலந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கும் ஊக்கம்கொடுத்த அதிபர் ,ஆசிரியர் ,பெற்றோர் யாவருக்கும் நன்றிகள்.

# நாட்டில் அக்கறை உள்ளவர்கள்

# இனவாதத்தை எதிர்க்க வேண்டும்

## எஸ்.பி.திஸ்ஸநாயக்க வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் ஏற்பட்ட பாதகமான விளைவுகளில் இருந்து மீள வேண்டிய காலம் வந்து விட்டது.

மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் கரு ஜெயசூரிய பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற புலமைப்பரிசில் வழங்கும் வைப்வததில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், சுதந்திரம் அடையும் போது இலங்கையின் பல்வேறு துறைகளில் காணப்பட்ட அபிவிருத்தி காலப்போக்கில் அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினாலும் பிரிவினைவாதப் போக்குகளினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன், பின்னடைவுக்கும் அவை காரணமாக அமைந்தன.

நாட்டின் வளர்ச்சிக்கு எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலைகளை உணர்ந்து முழுமையான எதிர்காலம ஒன்றை கட்டியெழுப்ப இந்த நாட்டின் இளைஞர்கள் முன்வரவேண்டும்.

அப்போது தான் இனப்பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை இனவாத சக்திகள் முறியடிக்க முனைந்து வருகின்றன.

இதனை நாட்டில் நலனுள்ள அனைவரும் எதிர்க்க வேண்டும எனவும் அவர் அங்கு கேட்டுக்கொண்டார். (தி)

## அரசியல் அமைப்புக்கு முரணான

# சுற்று நிருபங்களை புறக்கணிக்க முதலமைச்சர்கள் முடிவு

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு முரணானவகையில் அரசாங்கம் வெளியிடுகின்ற சுற்று நிருபங்களைப் புறக்கணிக்க மாகாண முதலமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண முதலமைச்சர்களின் சம்மேளனக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் ஏ்டுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மத்திய அரசாங்கத்திடம் முன்வைக்கும் பொருட்டு 17விசேட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

செப்ரெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள பனமுகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியாக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (தி)

## நஜாப் குண்டுவெடிப்பின் எதிரொலி

# ஈராக்கில் பாரிய துணை ராணுவப் பிரிவொன்றை அமைக்க முடிவு

### ரஷ்யாவும் இணைந்து கொள்ளும் என்கிறார் அதிபர் புடின்

(பக்தாத்)

**ஈராக்கில் பாரிய அளவு உதவி இராணுவப்பிரிவென்றை அமைக்கவுள்ளதாக அமெரிக்க இராணுவமும், ஈராக்கிய அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்**

**ஈராக்கின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு உதவும் வகையிலேயே இந்த இராணுவப்பிரிவு அமைக்கப் படவுள்ளதாக அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

புனித நகரமான நஜாப்பில் 95 பேரின் உயிர்களைப் பலிகொண்ட கார்க்குண்டு வெடிப்பையடுத்தே இவ்வாறான ஓர் அமைப்பை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்படைப்பிரிவு இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அமைக்கப்படும் என்றும்,இப் படைப்பிரிவில் சேர்க்கப்படுவோருக்கு குறுகிய கால இராணுவப் பயிறசி அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவப்பிரிவு அமைக்கப்பட்டதும் அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பொறுப்புக்கள் ஈராக்கியர்களைக் கொண்ட புதிய இராணுவப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தகவல்கள் கூறுகின்றன.

இதனிடையே ஈராக்கில் அமைக்கப்படவுள்ள இப்படைப் பிரிவுக்கு தமது நாட்டு வீரர்களையும் அனுப்ப முடியும் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

இப்பல்தேசிய படைப்பிரிவினர் அமெரிக்க தலைமையில் இயங்குவது குறித்து தாம் கவலைப்பட போவதில்லையெனவும், அதே சமயம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இது விடயம் குறித்து முக்கிய முடிவு ஒன்றை எடுக்க வேண்டும் என்று தாம் வலியுறுத்துவதில் எந்த மாற்றமும் இல்லையெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச்டபிள்யு புஷ் உலக நாடுகளுக்கு விடுத்துள்ள வேண்டு கோள் ஒன்றில்,

ஈராக்கில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டவும் அந்நாட்டு மக்களுக்கான குடிநீர் மின்சாரம் போன்ற பொது வசதிகளை வழங்கவும் மருத்துவ சேவைகளை வழங்குவதற்காகவும் இராணுவ வீரர்களையும், சுகாதார அதிகாரிகளையும் ஈராக்கிற்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (பி-2)

### ஈராக்கிலுள்ள பிறநாட்டுப் படைகளுக்கு

# அமெரிக்கா தலைமைவகிப்பது குறித்து ரஷ்யா அதிருப்தி ?

(மொஸ்கோ)

ஈராக்கில் பணிபுரிவதற்காக அனுப்பப்படும் பலநாட்டு அமைதி காக்கும் படைகளுக்கு அமெரிக்கா தலைமை வகிப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டுமென ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர்புடின் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைதிகாக்கும் படைக்கு பல நாட்டினது இராணுவ உதவியை அமெரிக்க ஜனாதிபதி அவசரமாக கோரியுள்ள நிலையில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் ஈராக்கிற்கு உதவும் நோக்கில் அமெரிக்கா மற்றும் ஜரோப்பிய நாடுகளுடன் ரஷ்யா தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் மீதான அமெரிக்கா தலைமையிலான போர் முடிவடைந்ததையடுத்து, அங்கு அமைதி காக்கும் படையினரை ஈடுபடுத்துவது குறித்து நீண்டகாலமாக அமெரிக்காவிற்கும் மற்றநாடுகளுக்குமிடையில் சர்ச்சைகள் எழுந்த வண்ணமே இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-2)

### மென்பானங்கள் தயாரிப்பு தொடர்பாக

# இந்திய அரசின் புதிய யோசனைகள் வெளியாகின

(புதுடில்லி)

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் அமுலில் உள்ள தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய, உணவுக்கலப்பட தடைச்சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான வரைவு அறிக்கையினை இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையின்படி இன்னும் 30 நாட்களுக்குள் இந்த வரைவு அறிக்கை தொடர்பாக ஆலோசனைகளையோ அல்லது யோசனைகளையோ தெரிவிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்களினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு வந்த பெப்ஸி, கொக்கோகோலா உட்பட 12 மென்பானங்களில் பூச்சுக்கொல்லி தூசு கலக்கப்பட்டுள்ளதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்நிறுவனங்கள் மீது எழுந்துள்ள எதிர்ப்புகளுக்கும், சர்ச்சைகளுக்கும் முடிவுகாணும் நோக்கில் இந்த வரைவு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (பி-2)

# இந்திய நாடாளுமன்றத் தாக்குதலுக்கு திட்டம் தீட்டியவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(ஸ்ரீநகர்)

இந்திய நாடாளுமன்றத்தின் மீது 2001ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுக்கு, திட்டம் தீட்டிய தீவிரவாதியை ஸ்ரீநகர் பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

பாகிஸ்தான் ஆதரவு தீவரவாதக் குழுவைச் சேர்ந்த காஸிம் பாபா என்ற நபரே இவ்வாறு சுட்டுக்கொல லப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது இவருடன் தொடர்புடைய மேலும் 3 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர் என்று ஸ்ரீநகர் பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி புதுடில்லி நாடாளுமன்றம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பலர் கொல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே புதுடில்லியின் மொசாம்பிக் பாலத்தின் அருகே ஜெய்ஷே முகமட் தீவிஜரவாதக் குழுவைச் சேர்ந்த இருளவரை எல்லைக் காவல் படையினர் சுட்டுக் கொன்றுளளனர்.

மற்றோர் இடத்தில் வாகன நெரிசலில்மிகுந்த பகுதியில் சென்று கொண்டிருந்த வாகனமொன்றில் இருந்து அதிகளவு ஆயுதங்களையும், வெடி மருந்துப் பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவங்களையடுத்து புதுடில்லியில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. (பி-2)

### சீனாவின் இராணுவ அச்சுறுத்தலை எதிர்கொள்ள

# தாய்வான் ஆயுதக் கொள்வனவு முயற்சியில் குதிக்க யோசிக்கிறது

(தைபீ)

சீனாவின் இராணுவ அச்சுறுத்ல்களை எதிர்கொள்ளும் நோக்கில் நீர்மூழ்கிக் கப்பல்களையும், ஏவுகணைகளையும் கொள்வனவு செய்வது குறித்து தாய்வான் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

தாய்வானை இராணுவ ரீதியில் அடக்க சீனா மறைமுக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைத் தடுப்பதற்கு வேறு மாற்று வழிகள் இல்லையென்று தாய்வானின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாய்வானின் இத்தீர்மானத்தை ஆயுதப் போட்டியாக கருதக் கூடாதென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (பி-2)

### ஆட்கொல்லி நோய்களுக்கான மருந்துகளை

# வறியநாடுகள் குறைந்த விலையில் பெறுவதற்கு வசதி

(நியுயோர்க்)

மலேரியா, எயிட்ஸ் போன்ற ஆட்கொல்லி நோய்களுக்கான மருந்து வகைகளை வறிய நாடுகள் குறைந்த விலையில் இறக்குமதி செய்யக்கூடிய ஒப்பந்தம் ஒன்றிற்கு உலக வர்த்தக மையம் அங்கீகரித்துள்ளது.

கடந்த சில தினங்களாக இடம்பெற்ற கடும் வாத பிரதிவாதங்களையடுத்தே இந்த அங்கீகாரத்தை உலக வர்த்தக மையம் அங்கீகரித்துள்ளது.

ஆட்கொல்லி நோய்களுக்கு எதிரான மருந்து வகைகளை உற்பத்தி செய்யமுடியாத நிலையிலுள்ள வறிய நாடுகளில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளை கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் ஏடுக்கப்பட்டுள்ளதென உலக வர்த்தகமையத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த அங்கீகாரத்தை பெறும் பொருட்டு ஆபிரிக்க நாடுகள் கூட்டாக பிரேரணை ஒன்றை உலக வர்த்தக மையத்தில் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

உலக தரிசனம்

### உயிர்ப்பலி தடை உத்தரவு

# "மக்கள் கவனத்தை திசைதிருப்பும் முயற்சி"

### டாக்டர் ராமதாஸ்

(சென்னை)

கோயில்களில் விலங்குகளையும், பறவைகளையும் உயிரப் பலி கொடுப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பிறப்பித்த தடையுத்தரவிற்கு, பாட்டாளிமக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் எஸ் ராமதாஸ் எதிர்ப்புக்கருத்து வெளியிட்டுள்ளார்.

கோயில்களில் விலங்குகளையும், பறவைகளையும் உயிர்ப்பலி கொடுப்பதற்கு தமிழ்நாட்டில் ஏற்கனவே சட்டம் இருந்து வருகிறது.

இச்சட்டம் செயற்படுத்தப்படாது இருப்பதாக கூறிய முதலமைச்சர் ஜெயலலிதா, அண்மையில் அச்சட்டத்தை அமுலுக்கு கொண்டு வரும்படி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவு குறித்து நேற்று முன்தினம் மதுரையில் செய்தியாளர் மத்தியில் பேசும்போதே டாக்டர் எஸ் ராமதாஸ்தனது எதிர்ப் புக்கருத்தை வெளியிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

ஜெயலலிதாவினால் விடுக்கப்பட்ட இந்த உத்தரவு, வழிபாடு நடத்தும் மக்களின் அடிப்படை உரிமையை மறுப்பதற்கு ஒப்பானது எனக்குறிப்பிட்டுள்ளார்.

2000ஆண்டுகளுக்கும் அதிகமாக நடைமுறையில் இருந்துவரும் இந்தப்பழக்கத்திற்கு விதித்துள்ள தடையை அனைவரும் எதிர்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்களை அன்றாட முக்கிய பிரச்சினைகளில் இருந்து திசை திருப்புவதற்காக இந்த தடையை பிறப்பித்துள்ளதாக முதலைச்சர் மீது அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (பி-2)

# வடகொரிய அணுவாயுத விடயத்தில் அமெரிக்கா கடும்போக்கை கொண்டுள்ளது

### வடகொரியா குற்றம் சாட்டுகிறது

(பெய்ஜிங்)

வடகொரிய அணுவாயுத சர்ச்சை விடயத்தில் அமெரிக்கா கடும் போக்கை கடைப்பிடிப்பதாக வட கொரியா குற்றம் சாட்டியுள்ளது.

பெய்ஜிங்கில் நடைபெற்ற 6 தரப்பு பேச்சுவார்த்தைகள் வடகொரியாவை நிராயுதபாணியாக்கும் வகையில் அமைந்த போதிலும், அதற்கு வடகொரியா இணங்கவில்லையெனத தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் தந்திரவார்த்தைகளை நம்பி, வடகொரியா எவ்வாறு தனது ஆயுதங்களைக் கைவிட முடியுமென வடகொரிய வெளிவிவகார அமைச்சு கேள்வி எழுப்பியுள்ளது.

வடகொரியாவை வீழ்த்த முனையும் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் ஈடுபடப் போவதில்லையென அந்த நாட்டின் ஜனாதிபதி அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

# பஞ்சாப்பில் பேருந்து விபத்தில் 40பேர்பலி

(புதுடில்லி)

இந்தியாவின் வடபகுதியில் பேருந்து ஒன்று ஆற்றில் வீழ்ந்ததில் 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

பஞ்சாப் மாநில பேருந்து சாப்சா ஆற்றில் விழ்ந்ததிலேயே இந்த 40 பயணிகளுயும் உயிரிழந்துள்ளனர்.

ஹிமாலய நலகாப் பகுதியில் சென்று கொண்டிருந்தபோதே இப்பேருந்து கட்டுப்பாட்டை இழந்துள்ளதாகவும் அதே வேகத்தில் வந்ததாவேலயே சாப்சா ஆற்றில் அது விழ நேரிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பி)

# தாய்லாந்தில் மாணவர்கள் கோஷ்டி மோதல்

### 300 மாணவர்கள் கைதாகினர்

(பாங்கொங்)

தாய்லாந்தில் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டட மோதல் சம்பவமொன்றையடுத்து 300ற்கும் அதிகமான மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் சம்பவத்தின் போது நூற்றிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துமுள்ளனர்.

பாங்கொங் நகரில் இடம்பெற்ற இசைநிகழ்ச்சி ஒன்றிற்கு ஆயுதங்களுடன் பிரவேசித்த மாணவர்களுக்கும், அங்கு இருந்த மாணவர்களுக்கும் இடையிலேயே இந்த மோதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தாய்லாந்தில் மாணவர்கள் மத்தியில் இவ்வாறான மோதல் சமபவங்கள் இடம்பெற்று வருவது அதிகரித்துச் செல்வதாக அந்நாட்டு அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனா. (பி-2)

# ...டு சித்திவிநாயகர் ஆலய
# ...றப்பு மலர் - 01-09-2003





### மகாகும்பாபிஷேக பிரதமகுருவின் ஆசிச்செய்தி



இலங்கை மாநகரில் யாழ்ப்பாணத்தை சார்ந்த மண்டைதீவுப் பகுதியில் சமய ஆசார பக்திமான்களாக வாழ்க்கை நடத்திய பல பெரியார்கள், புராணிகர்கள், சமய ஆசாரசீலர்கள் போன்றோர் வாழ்ந்தமையால் இந்த இடம் திருவெண்காடு என்னும் சிறப்புப் பெயருடன் விளங்கியது. விநாயகர் ஆலயம் வன்செயல்களால் பூசைகள் வழிபாடுகள் இன்றியும்,அந்த இடத்தில் வாழ்க்கை நடத்த முடியாத நிலை ஏற்பட்டும் சைவப் பெருமக்கள் மனம் நொந்து இடம் பெயர்ந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. சமயஸ்தலங்களில் பூசை வழிபாடுகள் தடைப்பட்டு சமயசெயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. மக்கள் மனவேதனைப்படும் நிலை தோன்றியது.

எனினும் அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்ற முதுமொழிக்கு அமைய, தற்போது நிலைமாற்றம் ஏற்பட்ட தன்மையினால் ஆலய[illegible]நாரணம் செய்து மகாகும்பாபிஷேகமாகிய பெருஞ் சாந்திவிழா நடாத்த திருவருள்கூடியுள்ளது. இது அவர்கள் செய்த வழிபாடும், பூர்வ புண்ணியமும் என்றே நாம் மனம்கொள்ள வேண்டும். எம்பெருமானைப் பிரார்த்தித்து நாடும் மக்களும் சமயமும் உய்யும் வகையில் விநாயகரின் திருவருள் எமக்குக் கிடைக்கவும் பேரானந்தப் பெருவாழ்வு பெறவும் விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து எமது சிறந்த ஆசிகளை சமர்ப்பிக்கின்றேன்

சுபமங்களம்.

**பிரதிஷ்டா சிரோண்மணி**
**பிரமஸ்ரீ சாமிவிஸ்வநாதக்குருக்கள்**

### சிவத்தமிழ் அன்னை அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி



ஈழத்திருநாட்டில் ஈடுஇணையற்ற பக்திமான்கள் வாழும் புனித ஊர்களில் மண்டைதீவு பெருமைக்குரியது.

கடல் சூழ்ந்த இத்திருவூரின் நடுவே கலங்கரை விளக்காக விளங்குபவர் திருவெண்காடு சித்தி விநாயகர். இத் திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகுந்த ஆனந்தம் அடைகிறேன்.

அருட்சிறப்புமிக்க தவயோகிகள் தனித்திருந்து தியானித்துப் பெருமை பெற்ற இத்திருக்கோயில் தீவகத்தின் காவல் தெய்வமாகக் காட்சியளித்து வருகிறது.

நீண்ட இடைவெளிக்குப்பின் இத்திருக்கோயிலை புனிதப்படுத்தி புனர்நிர்மாணம் செய்து அன்பர்கள் மகிமைப்படுத்தி மகா கும்பாபிஷேகம் செய்வது அறிந்து சைவ உலகம் பெருமை அடைகின்றது.

ஒவ்வொரு கிராமத்தின் எழுச்சியும் அந்தந்த கிராமங் களிலுள்ள கோயில்களின் எழுச்சியில் தங்கியுள்ளது. எனவே, ஆலயங்களைப் புனிதப்படுத்துகிற போது ஆலயத்தைச் சூழவுள்ள மக்கள் மனங்களும் புனிதம் பெறும் என்பதில் ஐயமில்லை

பாரம்பரிய பழம் பெரும் பதியான திருவெண்காடு சித்தி விநாயகரின் திருக்குட முழுக்கோடு எம்மைச்சூழ்ந்த தீவினைகள் அகன்று பெருவாழ்வு வாழ்வோமாக'

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

**தலைவர்**
**தெல்லிப்பழை துர்க்கை அம்மன்**
**தேவஸ்தானம்**

### கலைப்பீடாதிபதியின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணத்தை அண்டியுள்ள மண்டைதீவில் திருவெண்காடு என்ற புண்ணியதலத்தில் எழுந்தருளி அடியார்கள் துயர் தீர்க்கும் கருணைவள்ளலாகிய ஸ்ரீசித்தி விநாயகப் பெருமானுக்கு 01.09.2003 அன்று பஞ்சகுண்டபட்சி புனராவர்த்தன சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

பிரணவப் பொருளாகிய விநாயகப்பெருமான் முதன்மை வழிபாட்டிற்குரிய கண்கண்ட தெய்வம் என்ற காரணத்தால் எமது முன்னோர்கள் எமது பிரதேசத்தில் ஊர்தோறும் விநாயகப் பெருமானுக்குக் கோயில் எழுப்பி ஆன்மிக நலம் பெற்றனர். அவ்வரிசையில் இடம்பெற்ற மண்டைதீவு திருவெண்காடு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம் அண்மைக்காலமாக பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு நித்திய நைமித்தியங்கள் இன்றி இருந்ததை நிவர்த்திக்கும் வகையில் எம்பெருமானின் திருவருளினால் ஆலய தர்மகர்த்தாக்களும் அடியார்களும் ஒன்றிணைந்து திருப்பணி கைங்கரியங்களை மேற்கொண்டதன் பயனால், இவ்வாலயத்தில் மகாகும்பாபிஷேகத்தைக் காணும் பேறு இவ்வூர் மக்களுக்குக் கிட்டியுள்ளமை விநாயகப்பெருமானின் திருவருளின்றி வேறில்லை. ஆலயத்திருப்பணிகளுக்குப் பொருள் கொடுப்பவர்களும் அப்பொருளை வாங்கித் திருப்பணிகளைச் செய்பவர்களும் பெறும்பலன் உயர்ந்த வீடு பேறாகும்.

இக்கும்பாபிஷேகக் கைங்கரியத்தில் தம்மை அர்ப்பணிப்புடன் இணைத்துள்ள சிவாச்சாரியர்களுக்கும், சிற்பக்கலைஞர்களுக்கும், ஆலய தர்மகர்த்தாக்களுக்கும், அடியார்களுக்கும், எல்லாம் வல்ல ஸ்ரீசித்திவிநாயகப் பெருமானின் கும்பாபிஷேக திருவருட்பேறு பொலிவதாகுக என வாழ்த்துவதில் மிக்கமகிழ்ச்சியடைகின்றோம். மக்களனைவரும் இனிதே இன்பமுடன் வாழ விநாயகரது திருவருள் சித்திப்பதாகுக.

**பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்**

### திருவளரும் மண்டைதீவு திருவெண்காடு



சீர்பெருகு சிவநெறிகள் மலருகின்ற
திருவளரும் மண்டைதீவு திருவெண்காடு
பேர்பெருகு சித்திவிநாயகக் கணேசன்
பெருஞ்சாந்தி, உலகமெலாம் கருணைபொங்கி
தார்பெருகு மக்கள்சமா தானமாகத்
தனம்பொங்கி சுகம்பொங்கி சைவநீதி
நேர்பெருகு நலம்பொங்கி பொருளாதார
நிறைபொங்கி பயன்நல்கி நிகழ்ந்து வாழி

மண்டைதீவு மருவுதிரு வெண்காடுற்ற
மகாசித்தி விநாயகரே குடமுழுக்குக்
கொண்டவரே நின்னடிமைத் தொண்டரெல்லாம்
குறையாத வாழ்வுபெற மனம்சிறக்க
வண்டமிழின் புகழ்சிறக்க வளம்சிறக்க
மறைசிறக்க பசு சிறக்க திருமுறைத்தேன்
உண்டுவளர் மக்களெல்லாம் நிறைவாய்வாழ
ஓங்கார நாயகனே அருள்வாய் போற்றி



அருட்கவி.சீ.விநாசித்தம்பி


சிவகணேசன்
ரெக்ஸ்ரைல்
41,பெரியகடை யாழ்ப்பாணம்

அருள் விநாயகர்
மோட்டோர்ஸ்
108,ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# சேமிப்பு

நம்மிடம் ஒரு நூறு ரூபா இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இன்று செலவு செய்ய வேண்டியிருக்கின்றது. 50 ரூபாவுக்குத் தேவையான பொருட்கள் வாங்கலாம், சாப்பிடலாம். 50 ரூபாவை மீதியாக வைத்து நாளைக்குச் செலவு செய்து கொள்ளலாம் என்று எடுத்து வைக்க முடியும். நாளைக்கும் நமக்கு நூறு ரூபாய் கூலி கிடைக்கும் என்றாலும் நூறு ரூபாயோடு இந்த ஐம்பது ரூபாவையும் சேர்த்து நூற்றைம்பது ரூபாவாக வைத்துக் கொள்ளலாம். வேண்டிய ஒரு பொருளைக் கூட வாங்கிக் கொள்ளலாம்.

இன்னும் வேடிக்கையாகச் சொல்வதென்றால் தினந்தோறும் நூறு ரூபாய் கிடைக்கின்றதென்று வைத்துக் கொண்டால் பத்து நாள் கிடைக்கும் பணத்திலேயே வீட்டு வாடகை செலவெல்லாம் முடித்து விட்டு அடுத்த பத்து நாள் கிடைக்கின்ற பணத்தைச் சேர்த்து வைத்து உபயோகமான பொருளை வாங்க முடியும்.

செல்வம் என்பதைச் சேகரித்து வைத்து மிச்சம் பிடித்து வேறு ஏதாவது வகையில் உங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் நம்மிடத்தில் வேறு ஒரு வகையான செல்வம் இருக்கின்றது. அடுத்த நாள் கொண்டு போகவே முடியாத செல்வம் அது. ஆச்சரியமான ஒரு செல்வம் அது. என்ன தெரியுமா? இந்த செல்வத்தை நீங்கள் மறுநாள் சேர்த்து வைத்துக் கொண்டு மீண்டும் செலவு செய்வதற்கு உரிய வழி முறையே கிடையாது. அது என்ன தெரியுமா? காலம் !

நீங்கள் 24 மணி நேரத்தை இன்று தீர்த்து விட்டால் நாளைக்கு எந்தவொரு பத்து நிமிடத்தைக்கூட கையில் வைத்துக் கொள்ள முடியாது. இதனை வேடிக்கையாக எப்படிச் சொல்கின்றார்கள். 86ஆயிரத்து 400 விநாடி நமது கைகளில் இயற்கை கொடுத்துள்ளது. இந்த 86 ஆயிரத்து 400 வினாடிகளையும் நீங்கள் மிகக் கவனமாகச் செலவு செய்ய வேண்டும். பார்த்துப் பார்த்துப் பயனுடையதாக திட்டமிட்டு, எப்படிச் செய்ய வேண்டும் என்று யோசித்து யோசித்து செய்தால் நிறைய வகையில் பயனான வகையில் நேரம் செலவாகும். இதனை நாளைக்கு 20 விநாடி மறு தினம் 10 விநாடி என்று மிச்சம் வைக்க முடியாது.

இந்த மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள எல்லோருக்கும் பொதுவாகக் கொடுக்கப்பட்டுள்ள 86 ஆயிரத்து 400 விநாடிகளை வெற்றிகரமாகச் செலவு செய்பவர்கள் வாழ்க்கையில் முன்னேறுகின்றனர். இது தான் இரகசியம்! இவ்வளவு பெரிய ரூபா நமது கையில் இருக்கின்றது என்று தெரியாமல் முழுவதையும் வீணாக்கி விட்டார்கள். மறுநாள் அந்தக்கூலி கிடைக்காமல் ஏழ்மையில் கஷ்டப்படுகின்றார்கள். இதுதான் வாழ்கையைப் பற்றி, காலத்தைப்பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டிய பெரிய விஷயம்.

ஒவ்வொரு நாளையும் பயன்படுத்த வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் ''வாழ்நாள் வழியடைக்கும் கல்'' என்று ஒரு வார்த்தையில் கூறுகின்றார். பின்பு '' வீண் நாள் படாமை நன்றாற்றின் '' என்கிறார். அதாவது ஒரு நாள் கூட வீழ்நாளாகப் போய் விடக்கூடாது.

அபிராமிபட்டர் ஒரு அருமையான பாடலின் மூலமாக இப்படிக் கூறுகின்றார். என்னவென்றால் எனக்கு வயது அதிகரிக்கக்கூடாதா , குறையக்கூடாதா என்று கேட்கின்றபோது குறையாத வயதும் என்று கூறி விடுவார். அது என்ன குறையாத வயது? எல்லோருக்கும் வயது கூடிக்கொண்டு தானே செல்லும். 50 வயது இந்த வருடம். அடுத்த வருடம் 51 வயது. எனவே வயது கூடுகிறது. அபிராமிபட்டர் கூறுகின்றார் வயது குறைகின்றது என்று .

எப்படி என்றால் உனக்கு ஆயுள் 80வருடம் என்று வைத்துக் கொண்டால் நீ பூமியில் வந்து செலவு செய்ய 10 வருடம், 20 வருடம் என்று போய்க்கொண்டே இருக்கின்றது. மனிதா! உனக்கு வயது கூடுகின்றது என்று நினைக்காதே. உனக்கு வயது குறைகின்றது. இந்த ஆச்சரியமான நினைவூட்டல் அபிராமிபட்டருடைய பாடலுக்குள்ளே இருக்கின்றது.

ஒவ்வொரு நாளையும் நாம் வீழ்நாள் படாமல் செலவு செய்ய வேண்டிய கடமையில் இருக்கின்றோம். ஒரு சின்ன நிகழ்ச்சி சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு வேடிக்கையான கதை கூறுவார்கள். மைசூர் மகாராஜா காரில் போய்க்கொண்டிருக்கின்றார். இடையில் மூட்டை ஒன்றைச் சுமந்து கொண்டு நடுநடுங்கிக் கொண்டு வந்தார் ஒருவர். மகாராஜா காரை நிறுத்தினார். இந்த ஏழையைப் பார்த்தார். ''ஏனப்பா கஷ்டப்படுகின்றாய்? உனக்குப் பிள்ளை குட்டி இல்லையா? '' என்று கேட்டார். '' அதனால் தான் கஷ்டமே'' என்றார் அந்த ஏழை. யாரும் எனக்கு உழைப்பதில்லை. '' அவர்களுக்கும் நான் தான் உழைத்துப்போடவேண்டியிருக்கின்றது. நான் என்ன செய்வேன் மகாராஜா'' என்றார். மகாராஜாவுக்கு வருத்தமாகி விட்டது.

திரும்பிப் பார்த்தார். நிறைய சந்தன மரங்கள். இதோ இந்தக் கடைசிச் சந்தனமரம் வரை உனக்கு எழுதி வைக்கிறேன். நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டார் ராஜா. அவர் மரங்களைச் சுட்டுக் கரியாக்கி விற்றுக்கொண்டிருப்பவர். அவரது வறுமையை நீக்குவதற்காக மகாராஜா ''சந்தன மரங்களையே எழுதி வைக்கிறேன் போ'' என்று கூறிவிட்டு காரில் ஏறிப் போய் விட்டார்.

இரண்டு ஆண்டுகளின் பின் மறுபடியும் அந்த வழியாக வருகின்றபோது பார்த்தால் மறுபடியும் அந்தக்கிழவர் மூட்டையுடன் வந்து கொண்டிருந்தார். மகாராஜா கேட்டார் '' என்னஆயிற்று உனக்கு ?'' என்றார். அதற்கு அவர் ''யார் மகாராஜாவா! கால் வயிறு கஞ்சகுடித்த அன்னை அரை வயிறு கஞ்சி குடிக்க வைத்தவரா?'' என்று கேட்கின்றார். ''ஏன் இப்படி வருகிறாய் ? மறுபடியும் ஏழையாகி விட்டாயே'' என்றார் ராஜா. அதற்கு கிழவர் கூறுகின்றார் நீங்கள் கொடுத்த மரங்களை எல்லாம் சுட்டுக்கரியாக்கி விற்று விட்டேன் சந்தன மரங்களைச் சுட்டுக்கரியாக்கிய ஒரு மூடனுக்கும் ஒவ்வொரு நாளையும் கரியாக்கிக்கொண்டிருக்கும் மனிதனுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. நமது ஒவ்வொரு வாழ்நாளும் ஒரு சந்தன மரம் அதைச் சரியாகப்பயன்படுத்தி வாழ்வை வளமாக்குவோம்.

சுகி சிவம்

# தூத்துக்குடி- கொழும்பு கப்பல் சேவை
# மேலும் தாமதமாகும் சாத்தியம்

(கொழும்பு)

தூத்துக்குடிக்கும்- கொழும்புக்கும் இடையிலான பிரயாணிகள் கப்பல் சேவை விரைவில் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையெனத் தெரியவருகிறது.

இக்கப்பல் சேவையை ஆரம்பிக்க மேலும் பல மாதங்கள் எடுக்கும் எனவும் கப்பல் சேவை தொடர்பான உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுவதற்காக இலங்கை வரவிருந்த இந்தியக் கப்பல் துறை போக்குவரத்து அமைச்சர் தனது விஜயத்தை இரத்துச் செய்துள்ளார்.

இவ் உடன்படிக்கை இந்த வாரம் கைச்சாத்திடப்பட்டு மாத இறுதிக்குள் இரு நாடுகளுக்கும் இடையே கப்பல் சேவையை ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டது தெரிந்ததே.

இதற்கிடையில் தமிழ் நாட்டின் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இவ் உடன்படிக்கை கைச்சாத்திடுவதை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எதிர்த்துள்ளார்.

அத்துடன், இராமேஸ்வரம்- தலைமன்னார் பாலம் அமைப்பு விவகாரத்தில் தமிழ்நாட்டு முதலமைச்சின் கருத்துக்களும் பெற்றுக் கொள்ளப்படும் என மத்திய அரசு அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (தி)

# கேள்விக்குறியாகும் நிலையில் இலங்கையின் சமாதான முயற்சிகள்

## அரசியல் அவதானிகள் கருத்து வெளியீடு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக ஐக்கியதேசிய முன்னணி அரசினால், விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விடுதலைப் புலிகள் ஆராய்ந்து வரும் இவ்வேளையில், தென்பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள் சமாதான முயற்சிகளை கேள்விக்குறியாக்கி உள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்த இனவாத அரசியல் நடைமுறைகள் தொடர்ந்து இடம் பெறுவதானது சமாதான முயற்சியைக் குழப்பும் நடவடிக்கையாகவே கருதப்படுகிறது.

வடக்கையும், கிழக்கையும் பிரிக்கும் ஜனாதிபதியின் முயற்சியும், அதற்கு ஒத்துப்பாடும் பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் அரசியல் குளிர்காயவே முற்படுகின்றனர்.

முஸ்லிம்களுக்கென தனியான பொலிஸ்பிரிவு, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி.கூட்டு என்பனவும் அரசியல் உறுதியின்மையை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

எனினும், இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதால் நோர்வே உட்பட ஐரோப்பிய நாடுகள் பலவும் அழுத்தம் பிரயோகித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## இராசி பலன்

01. 09. 2003

(ஆவணி ~15, திங்கள்)

பஞ்சமி - பி.ப. 2.37 வரை
சுவாதி -பி.இ. 12.18 வரை
இராகுகாலம் - 7.35 - 9.05
சுபநேரம் - 12.05 - 1.35

அமிர்தம், சஷ்டி

**மேடம்**
சௌக்கியம், நண்பர் சந்திப்பு, காரிய அனுகூலம், பெருமை.

**இடபம்**
மனமகிழ்ச்சி, புதியசிந்தை, தொழில் ஆர்வம், கருமம் கைகூடும்.

**மிதுனம்**
போசன நன்மை, தாழ்ந்த சுபாவம், புதிய விடயம், முயற்சி தாமதம்.

**கடகம்**
வாக்கு மேன்மை, உடனலக் குறைவு, மனப்பயம், திடீர் நன்மை.

**சிங்கம்**
பிரயாண சுகம், சந்தோஷம், சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும்.

**கன்னி**
தனவிரயம், நண்பர் விரோதம், விவாதம், காரியதாமதம்.

**துலாம்**
சயன சுகம், நல்ல மனைவாசம், மேன்மை, நல்ல முயற்சி.

**விருச்சிகம்**
நிலைமாற்றம், காரிய அலைச்சல், சுப காரிய செலவு, மனக்கிலேசம்.

**தனுசு**
முயற்சி கைகூடும், சுப நிகழ்ச்சி, தன இலாபம், குடும்ப சுகம்.

**மகரம்**
நல்ல செய்தி, உற்சாகம், பிறருக்கு உதவுதல், தொழில் முயற்சி.

**கும்பம்**
சித்த ரோகம், காரிய தாமதம், பிரயாணம், மனக்குழப்பம்.

**மீனம்**
வாகன பயம், உடல் வியாதி, வீண்பகை, காரிய தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## வருமான வரித் திணைக்களத்திடம்
# சொத்து விபரங்களை 50 ஆயிரம் பேர் வெளியிட்டனர்

(கொழும்பு)

சொத்து விபரங்களை வெளியிடுவதற்காக அரசு அறிவித்திருந்த பொது மன்னிப்புக்காலத்தில் சுமார் 50 ஆயிரம் பேர் தமது சொத்து விபரங்களை வெளியிட்டுள்ளனர்.

சொத்து விபரங்களை வெளியிடுவதற்கு அர்சாங்கம் வழங்கியிருந்த பொது மன்னிப்புக் காலம் நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

இந்த பொது மன்னிப்புக்காலம் கடந்த ஜன் மாதத்துடன் முடிவடைய இருந்த போதிலும், வருமான வரித் திணைக்களம் மேலும் இரு மாத கால நீடிப்புச் செய்திருந்தது.

இக்காலப் பகுதியில் வருமான வரிகளைச் செலுத்தத்தவறுபவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி நிதிஅமைச்சர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (தி)

## இங்கிலாந்து கிரிக்கெட் போட்டிகளில்
# அரச சுற்றுலா மாளிகைகளை பயன்படுத்த பிரதமர் அனுமதி

(கொழும்பு)

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இவ்வருட பிற்பகுதியில் இலங்கைச் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் போது ,இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் பெருந்தொகையான உல்லாசப் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அரசாங்க சுற்றுலா மாளிகைகளை பயன்படுத்திக் கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுமதியளித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் திலங்க சுமதி பால பிரதமரை அண்மையில் சந்தித்துப் பேசும்போதே அவர் அனுமதி அளித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இலங்கைச் சுற்றுலாப் போட்டிக் காலத்தில் 3ஆயிரத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளுக்கு அறை வசதிகள் பற்றாக் குறை ஏற்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இட நெருக்கடி குறித்து சுமதி பால பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்தே இவ் அனுமதி அளிக்கப்பட்டது. (தி)

## கொழும்பு தே.வைத்தியசாலையில்
# துடிப்பை நிறுத்தாமலே இதய சத்திர சிகிச்சை

(கொழும்பு)

இதய துடிப்பை நிறுத்தாமலேயே செய்யப்படும் '' துடிக்கும் இதயம் '' என்றழைக்கப்படுகின்ற இதய சத்திர சிகிச்சை ஒன்று அண்மையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஹெக்டே வீரசிங்க தெரிவிக்கையில்,

தற்போது செலவு அதிகமான சத்திர சிகிச்சைகளை கடந்த சில மாதங்களாகத் தாம் மேற்கொள்வதாகவும் இத்தகையதொரு சத்திர சிகிச்சை முதல் தடவையாகவே தமது வைத்தியசாலையில் செய்யப்பட்டுள்ளதாகவும் தாம் கிட்டத்தட்ட 60 சத்திர சிகிச்சைகளை அண்மையில் செய்திருப்பதாகவும் . அனைத்து நோயாளர்களும் சிக்கல் எதுவுமின்றி வாழ்வதாகவும் தெரிவித்தார்.

இச்சத்திர சிகிச்சையின் மூலம் நோயாளர்களுக்கு பல நன்மைகள் கிடைக்கும். ஏனைய சத்திர சிகிச்சைகளுடன் ஒப்பிடுகையில் இதில் குருதியிழப்பு மிகவும் குறைவு. அத்துடன் ஒரு இலட்சம் ரூபாவை தலா ஒவ்வொரு நோயாளியும் மீதப் படுத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை இவ்வருடம் இதய சத்திர சிகிச்சைகளை அதிகமாக செய்து வருகிறது. இவ்வருடம் கிட்டத்தட்ட 1000 சத்திர சிகிச்சைகளை தாம் மேற்கொள்ள விருப்பதாகவும் வீரசிங்க தெரிவித்தார். இன்னும் இதய சத்திர சிகிச்சை செய்து கொள்வதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் காலியிலுள்ள கரபிட்டிய போதனாவைத்தியசாலையிலும் 4,102 நோயாளர்கள் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். 3,275 பல்வேறு வகையான இதய சத்திர சிகிச்சைகள் இவ்விரு வைத்தியசாலைகளிலும் இது வரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (பி)

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்
– குறள்

# வலம்புரி

## ஜனாதிபதியின் திட்டம்!

விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கவிருக்கும் இடைக்கால சபைத் திட்டவரைபை அரசாங்கம் ஏற்குமாயின் அதனை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தைக் கலைக்க ஜனாதிபதி போட்டுள்ள திட்டம் இப்போது மெல்லக் கசியத் தொடங்கியுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பிரிக்கும் நோக்குடன் செயற்படும் ஜனாதிபதி அரசாங்கம் முன்னெடுத்துள்ள சமாதான முயற்சியைக் குழப்புவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். அவரின் முயற்சிக்கு ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற கட்சிகளும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு சமாதானப் பேச்சுக்களை அரசு ஆரம்பித்த காலத்திலிருந்து ஐ.தே.மு. ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஜனாதிபதி செயற்பட்டு வந்தார். எனினும் அவரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு ஒரு வருடத் தடையை அரசியல் யாப்பு விதித்திருந்தது. அதாவது பொதுத் தேர்தல் நடந்து ஒரு வருடகாலத்திற்கு முன்னர் அரசாங்கத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படவில்லை. இதனால் ஒருவருடகாலம் வரை ஜனாதிபதி அரசைக் கலைப்பதற்கான ஆதாரங்களைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தார்.

இருந்தும் அரசைக் கலைப்பதற்கான ஆதாரம் அவருக்குக் கிடைக்கவில்லை. நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சி மேற்கொள்ளப்பட்டதனால், ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைப்பது உடனடிச் சாத்தியமல்ல என்ற முடிவை ஜனாதிபதி எடுத்தார்.

சமாதான முயற்சி முன்னெடுக்கப்படும் கால கட்டத்தில் அரசாங்கத்தைக் கலைப்பது சர்வதேசத்தின் மத்தியில் தனக்கு இருக்கக் கூடிய நன்மதிப்பைக் கெடுத்துவிடும் என்பதனால், அத்தகைய நடவடிக்கை எதனையும் அவர் மேற்கொள்ளவில்லை.

இருந்தும் ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்து தனது சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளும் எண்ணத்திலிருந்து ஜனாதிபதி விலகினாரல்ல.

அவரின் காத்திருப்பு அரசைக் கலைப்பதற்கான-ஓரளவுக்கேனும் நியாயப்படுத்தக் கூடியதான காரணங்களைக் கண்டறிவதாகும்.

அவர் எதிர்பார்த்த பல காரணங்கள் சறுக்கிப் போயினும் தற்போது கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற சம்பவங்கள் நல்லதொரு சாட்டாக அமைந்திருப்பதுடன், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவும் அவருக்கு கிடைக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி தனது திட்டத்தை நிறைவேற்றக் கூடிய வகையில் முஸ்லிம் கட்சிகளும் செயற்பட்டுவருவதனால், விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கவுள்ள இடைக் கால சபையுடன் ஐ.தே.முன்னணி அரசுக்கு முடிவு கட்ட ஜனாதிபதி எண்ணியுள்ளார்.

---

# வடக்கு-கிழக்குப் பகுதியில் இடைக்கால நிர்வாக சபையை அமைத்தாலே நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும்

## அமைச்சர் எஸ்.பி.திஸ்ஸநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கான ஐக்கியதேசிய முன்னணி அரசின் யோசனைகள் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும், சிங்கள-தமிழ் மக்களிடையே சகோதரத்தை வளர்ப்பதற்கும் உதவும் என சமுர்த்தி விவகாரஅமைச்சர் எஸ்.பி.திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின செயற்குழுவை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், பொதுஜன ஐக்கியமுன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் அரசியல் லாபம்பெறும் குறுகிய நோக்குடன் அரசாங்கத்தின் சமாதானத் திட்டத்திற்கு எதிராக குரல்எழுப்பி வருகிறார்கள்.

இருப்பினும் இவர்களது ஆர்ப்பாட்டப் பேரணிகள், கண்டனங்கள், கூட்டங்கள் யாவும் தோல்வியிலே முடிவுற்றன.

நாட்டு மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு பயனுள்ள திட்டமொன்றை அரசு இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளது.

தற்போதைய அரசின் கடந்த 18 மாதகால கஷ்டங்கள் யாவும் முடிவுக்கு வருவதற்கு இத்திட்டம் உதவும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற போது மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தை சீர்செய்வதில் அரசு வெற்றிகண்டுள்ளது.

பிரதமர் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையே இந்த வெற்றிக்குக் காரணம் என்றார்.

மேலும், சர்வதேச சமூகம் பெருந்தொகைப்பணத்தை இலங்கைக்கு உதவியாக வழங்கியுள்ளது. இந்நிதி மக்களின் மேம்பாட்டுத் திட்டங்களுக்குத் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசின் எதிர்கால நடவடிக்கைகளை விளக்கிக்கூறிய அமைச்சர், வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (தி)

---

# மனிதனின் ஆளுமை எதில் தங்கியுள்ளது?

(குளியாப்பிட்டி)

ஒரு மனிதனின் ஆளுமையை உருவாக்கித் தருவது பணமும் அதிகாரமும் தான் என்று பலரும் கருதுகிறார்கள். ஆனால் அறிவு, நடத்தை, திறமை முதலியவைகளே ஒருவனின் ஆளுமையை உருவாக்குகின்றது.

இவ்வாறு பேராதனைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் வராகொட பேமரத்ன தேரோ கூறினார். பரிசளிப்பு விழாவொன்றில் பேசிய பேராசிரியர் பிரேமரத்தின தேரர்,

பணமும் அதிகாரமும் உள்ளவர்களால் தங்களின் எதிரிகளை அழிக்கவும் தமது தவறான காரியங்கள் வெளிவராமல் இருக்க அதிகாரிகளை நிர்ப்பந்திக்க மட்டுமே முடியும் என்றார். (பி)

---

# சின்னமுத்துநோய் பரவலை எதிர்த்து நாடளாவிய ரீதியில் திட்டம் முன்னெடுப்பு

## கொழும்பில் பரீட்சார்த்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

சின்னமுத்து நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தியை உடலில் பூரணப்படுத்தும் திட்டம் ஒன்று நாடளாவிய ரீதியில் நடாத்தப்படவுள்ளது.

இதன் முதறகட்டமாக எதிர்வரும் 5ஆம் திகதி இவ் ஆரம்பநிகழ்ச்சித் திட்டம் கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் நிஹால் அபய சிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 5ஆம் திகதி கொழும் ஆரம்பிக்கப்படும் இத்திட்டம் படிப்படியாக வடகிழக்கு உட்பட சகல பிரதேசங்களிலும் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கொழும்பில் 10தொடகம் 15வயது வரையான பாடசாலை மாணவர்களுக்கு முதற்கட்டமாக இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன், பாடசாலை செல்லாத மற்றும் வீதியோரச் சிறுவர்களுக்கும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் வீடு வீடாகச்சென்று தடுப்புசி வழங்கவுள்ளனர் எனவும் டாக்டா நிஹால் அபேயசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (க-18)

---

# காணாமல் போன சைக்கிள்கள் விடுதலைப் புலிகளால் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்புப் பகுதியில் வைத்து காணாமல்போன முஸ்லிம் மக்களின் ஒரு தொகுதி சைக்கிள்களை தமிழீழ விடுதலைப்புலிகள் மீட்டுள்ளனர்.

இச்சைக்கிள்கள் யாவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அக்கரைப்பற்றுச் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக கல்முனைக்கோட்டை அரசியல்துறைப் பொறுப்பாளர் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடாக இந்தச்சைக்கிள்களை உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி)

---

## தினசரி தியானம்

### ஆரோக்கியம்

வாழ்க்கை வாழ்வதற்கே என்பதன் அரும் பொருள்எது? அதுதான் ஆரோக்கியம். மனிதன் உயிருடன் இருப்பதற்கு உடல் முதன்மையானதும் அவசியமானதும் ஆகும். சிறப்பு, செல்வம், விருப்பம், விடுதலை வாழ்க்கையின் பேரின்பம் ஆகியவற்றுக்கு அடிப்படைக் காரணம் ஆரோக்கியமே. உடல்நலம் பேணுவதற்கான முறைகள் கவனத்தில் இருக்க வேண்டும். அவைகளை விலக்கிவைத்து மீறி நடக்கக் கூடாது.

சுவாமி சிவானந்தர்

---

## கடந்த சிலமாதங்களில்

# 142 அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் பதிவுசெய்துள்ளன

(கொழும்பு)

கடந்த சில மாதங்களில் இலங்கையில் 142அரச சார்பற்ற நிறுவனங்கள் புதிதாக பதிவுசெய்துள்ளன.

இவற்றில் 17நிறுவனங்கள் வெளிநாடுகளின் அரச சார்பற்ற அமைப்புக்களைச் சேர்ந்தவை என சமூக சேவைகள் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது மேற்கொளளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான உதவியை வழங்க இவை முன்வந்துள்ளன.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு இவற்றில் சில நிறுவனங்கள் முன்வந்துள்ளதுடன், தமது பணிகளையும் சில அமைப்புகள் ஆரம்பித்துள்ளன என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (தி)

---

# பின்லாந்தின் அனுசரணையுடன் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு?

## ஊடகச் செய்திக்கு விமல்வீரவன்ச மறுப்பு

(கொழும்பு)

பின்லாந்து நாட்டின் அனுசரணையுடன் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு மக்கள விடுதலைமுன்னணி இணக்கம் தெரிவித்திருப்பதாக ஊடகங்களில் வெளியான செய்தியை மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச வன்மையாகக் கண்டித்துள்ளார்.

எமது நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்வுக்குக் கொண்டு வருவதற்கு எந்தவித உதவிகளையும் வெளிநாடுகள் செய்யத்தேவையில்லை. நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளையே நாட்டைவிட்டு வெளியேற்றுவதுகுறித்து நாம் திடமான நிலைப்பாட்டில் உள்ளோம். இதில் பின்லாந்து மாத்திரம் விதிவிலக்கல்ல. இந்தநிலையில் நாம் இங்கு பின்லாந்தை எவ்வாறு அனுமதிக்க முடியும்என விமல் வீரவன்ச வினா எழுப்பியுள்ளார்.

எமது உறுதியான நிலை இவ்வாறிருக்க பின்லாந்தின் அனுசரணை எமது நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தேவையென்று நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் வலியுறுத்தவில்லை. குறிப்பாக மேற்கத்திய நாடுகள் எதனையும் நாம் அனுமதிக்கப் போவதில்லை.

அத்துடன், பின்லாந்து தொடர்பான யோசனைகள் எதனையும் நாம் ஏற்கப்போவதில்லை. அவ்வாறு அவர்கள் யோசனைகள் எதுவும் தெரிவிததாலும் நாம் அதை நிராகரிப்போம். எமது நிலைப்பாடு இதுதான்.

இதைவிடுத்து மக்கள் விடுதலை முன்னணி பின்லாந்திற்கு ஆதரவு என ஊடகங்களில் வெளியான செய்தியில் எதுவித உண்மையும் இலலை என வீரவன்ச மேலும் உறுதியாகக் குறிப்பிட்டுள்ளார். (க-18)

---

# மன்னார்-மடு வீதி மக்களின் பாவனைக்கு

(கொழும்பு)

மன்னார்-மடு வீதி மக்களின் போக்குவரத்துப் பாவனைக்காக நேற்று முதல் மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ட்ரைவ்கெவ்ரெலவ்சனுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாணடோவுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பிலேயே இதற்கான இணக்கம் காணப்பட்டது.

கடந்த12 நாள்கள் தொடர்ச்சியாக இவ்வதி மூடப்பட்டிருந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதேவேளை,தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக பாதையைத்திறக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அத்துடன்,இவ்வீதி திறப்புவிடயம் குறித்து யுத்தநிறுத்தக்கண்காணிப்புக் குழுத்தலைவருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கும் இடையே மீண்டுமொரு தடவை இன்று பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (தி)

## ஜனாதிபதியின் மாகாண பிரிப்பில் இந்தியா தலையிடக் கூடாது

### சிஹல உறுமய, நிருபன் சென்னுக்கு கடிதம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இந்தியா தலையிடக்கூடாது என சிஹல உறுமயக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்றை சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் நிருபம் சென்னிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கபட்டிருப்பதாவது:

இலங்கையில் தனித் தமிழீழம் ஒன்று அமைக்கப்படுமானால் பெரும் அழிவு ஏற்படுவதுடன் அது இந்தியாவின நிலையான தன்மையையும் பாதிக்கும்.

எனவே வடக்கு கிழக்கு மாகாணங்களை தனித்தனி மாகாணங்களாக பிரிக்க எடுக்கும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியா தலையிடக் கூடாது என்றுள்ளது.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எதிராக இந்தியா குரல் கொடுக்க வேண்டுமென்றும் இதுவிடயத்தில் இந்தியா உடன் தலையிட வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவை கோரியிருந்தமை தெரிந்ததே.

(க-10)

## புலிகள்...

வதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் கணிசமான ஆதரவைப் பெற உத்தேசித்திருப்பதாகவும் தென்னிலங்கைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்காகவே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் தனது நிலைப்பாட்டை உறுதிசெய்ய முனைவது பிரதமர் ரணிலுக்கு தர்மசங்கடமான நிலை உருவாக்கியுள்ளது.

இந் நிலையில் விடுதலைப் புலிகள குறித்த இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை மேலும் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியிருப்பதாகவும், இதில் பிரதமர் எவ்வாறு வெற்றி கொள்ளப போகிறார் என்பதைப் பொறுத்தே எதிகால நிலைமை அமையும். இதில் அவர் வெற்றியடையாது போனால் அரசியலில் பாரதூரமான மாற்றங்களும் விளைவுகளும் ஏற்படலாம் என அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ம)

## தமிழ் மக்களின்...

றியச் செய்து ஆதரவு தந்து எம்மை வளர்த்தவர்கள் எம்மக்கள்.

அரசியல் விழிப்புணர்வும் தேசப் பற்றும் மிக்க எம் மக்கள் எமக்குத் தந்த உத்வேகமே இன்று பலமான ஒரு சக்தியாக விடுதலைப் புலிகள் உருவாகக் காரணம்.

இந்த மக்கள் மீதுள்ள நம்பிக்கையில்தான் கரும்புலி மில்லர், தியாகி திலீபன், மாலதி, நளாயினி என ஆயிரம் ஆயிரம் வேங்கைகள் தம் உயிர்களை ஆகுதியாக்கி உள்ளனர்.

இன்றைய சமாதான நிலையில் தற்போது இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

இந்த அழகிய நாட்டில் இணக்கத்துடன் நாம் ஒற்றுமையாக வாழ விரும்புகிறோம். சுய நிர்ணய உரிமையுடன் தமிழ் மக்கள் வாழ்வதற்குரிய அங்கீகாரம் மறுக்கப்படுமானால் பிரிந்து போகும் பலம் மிக்கவர்களாகவே நாம் இருக்கின்றோம். இதில் தமிழினம் உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளது.

நாம் புதிதாக எதையும் கேட்கவில்லை அல்லது யாருக்கும் விரோதமாகவும் செயற்படவில்லை.

## துப்பாக்கி தயாரித்தவர் மாத்தளையில் கைது

(கொழும்பு)

மாத்தளைப் பகுதியில் சட்ட விரோதமாகத் துப்பாக்கிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்துவந்த நபர் ஒருவர் பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்த நபரிடமிருந்து மூன்று கைத்துப்பாக்கிகளையும், ரி.56 ரகத் துப்பாக்கிக்குரிய மூன்று ரவைகளையும் ரத்தோட்டையில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர் துப்பாக்கி ஒன்றை 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்றுவந்ததாகப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதேவேளை நேற்று மாலை சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த)

## பொ.ஐ.மு. எம்.பிகள் சுற்றுலாவுக்கு வெளிநாடு செல்லக் கூடாது

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி எம்.பிகளை வெளிநாட்டிற்கு சுற்றுலாச் செல்லக் கூடாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தடை விதித்ததைத் தொடர்ந்து பல எம்.பிகள் தமது வெளிநாட்டுச் சுற்றுலாக்களை பிற்போட்டுள்ளனர்.

இச் சுற்றுலாவை அனைத்துப் பாராளுமன்றங்களின் ஒன்றியம் ஒழுங்கு செய்திருந்தது. இவர்கள் இருவார கால சுற்றுலாவின் போது, தென்னாபிரிக்கவிற்கும் ஜேர்மனிக்கும் சென்று பாராளுமன்றக் குழுவின் செயற்பாடுகள் பற்றி அறிய இருந்தனர். இச் சுற்றுலாவிற்கு தற்போதைய சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா தலைமை வகிக்கவிருந்தார்.

இதனை ஜனாதிபதி தடுத்து நிறுத்தியதை அடுத்து பொ.ஐ.மு. எம்:பிகள் அதிலிருந்து விலகிக் கொண்டனர். இதனால் தற்போது இச் சுற்றுலா முழுவதுமாக நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் செப்ரெம்பர் முதல் வாரத்தில் நடைபெறவிருந்த பாராளுமன்ற அமர்வுகள், எம்.பிகளின் சுற்றுலாவிற்கு முன்னர் நிறுத்தப்பட்டிருந்தன. ஆனால் சுற்றுலா நடைபெறவில்லை.

(இ)

## மன்னார்...

50 கிலோமீற்றர் தூரம் பிரயாணம் செய்ய வேண்டியிருப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுச் சுட்டிக் காட்டியுள்ளது. இதேவேளை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுக்கும் இடையில் மன்னார்- மடு வீதியை திறப்பது தொடர்பாக நடை பெற்ற பேச்சு வார்த்தையில் நிபந்தனையுடன் இணக்கம் கண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ம)

இழந்து போன எம்வாழ்வுரிமையையும் எமது நிலம் எமக்கு வேண்டும் என்ற நியாயமான விருப்புக்களையுமே கேட்டு நிற்கின்றோம் என்று அமுதன் மேலும் தெரிவித்தார்.

(க-4)

## ஜனநாயக மரபிலான...

பொங்குதமிழ் நிகழ்வில் அரசாங்க ஊழியர்கள் கலந்து கொள்வதை யாரும் பலவந்தமாகத் தடுக்க முடியாது. அவ்வாறு தடுப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை.

நாட்டில் யுத்தம் நடை பெற்றுவந்த வடக்குக் கிழக்குப் பகுதியில், பொங்கு தமிழ் போன்ற ஜனநாயக நிகழ்வுகள் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது.

இவ்வாறான பொங்குதமிழ் நிகழ்வுக்கு இயலும் போதெல்லாம் அரசாங்கம் ஆதரவு வழங்க வேண்டும்.

பொங்குதமிழ் நிகழ்வு விடுதலைப் புலிகளினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வு என்றாலும், விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிமுறைக்கு வந்தமை அரசாங்கத்திற்குக் கிடைத்த பெரிய வெற்றியாகும். ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பற்றி அனைவரையும் சிந்திக்க வைப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு கொடூரமான அமைப்பாக இருந்தது. இப்பொழுது அவ்வமைப்பு ஜனநாயக வழிக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கும் அவர்கள் ஜனநாயக அமைப்பாக மாறுவதற்கும அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அபயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை வவுனியாவில் இடம் பெற்ற பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவின் கூட்டத்தில் பங்கு பற்றிய அரச ஊழியர்களை படைத்தரப்பினர் விசாரணைக்குட்படுத்த முயன்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த)

## விபத்தில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளொன்றை, இராணுவ வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிள் சேதமடைந்தது. அதில் பயணம் செய்த ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகி, வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அரசடி வீதியூடாக மிக வேகமாக வந்த இராணுவ வாகனம், பிறவுண் வீதியூடாக அரசடி வீதியைக் கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளின் பின்பகுதியில் மோதியது.

நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தின் போது திருநெல்வேலி வாலையம்மன் கோபிலடியைச் சேர்ந்த இ.சிறிரஞ்சன் (வயது-22) என்பவர் சிறுகாயங்களுக்குள்ளானார்.

இச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இராணுவக் காவலரண் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-5)


## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 9ந் திகதி தேர்த் திருவிழா இடம்பெறும்.

(த)



இந் நிலையில் விடுதலைப் புலிகள குறித்த இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை மேலும் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியிருப்பதாகவும், இதில் பிரதமர் எவ்வாறு வெற்றி கொள்ளப போகிறார் என்பதைப் பொறுத்தே எதிர்கால நிலைமை அமையும். இதில் அவர் வெற்றியடையாது போனால் அரசியலில் பாரதூரமான மாற்றங்களும் விளைவுகளும் ஏற்படலாம் என அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

இந்த அழகிய நாட்டில் இணக்கத்துடன் நாம் ஒற்றுமையாக வாழ விரும்புகிறோம். சுய நிர்ணய உரிமையுடன் தமிழ் மக்கள் வாழ்வதற்குரிய அங்கீகாரம் மறுக்கப்படுமானால் பிரிந்து போகும் பலம் மிக்கவர்களாகவே நாம் இருக்கின்றோம். இதில் தமிழினம் உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளது.

நாம் புதிதாக எதையும் கேட்கவில்லை அல்லது யாருக்கும் விரோதமாகவும் செயற்படவில்லை.

பெர்ணான்டோவுக்கும் இடையில் மன்னார்- மடு வீதியை திறப்பது தொடர்பாக நடை பெற்ற பேச்சு வார்த்தையில் நிபந்தனையுடன் இணக்கம் கண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

---

இழந்து போன எம்வாழ்வுரிமையையும் எமது நிலம் எமக்கு வேண்டும் என்ற நியாயமான விருப்புகளையுமே கேட்டு நிற்கின்றோம் என்று அமுதன் மேலும் தெரிவித்தார். (க-4)

வடக்குக் கிழக்குப் பகுதியில், பொங்கு தமிழ் போன்ற ஜனநாயக நிகழ்வுகள் இடம்பெறுவது• வரவேற்கத்தக்கது.

இவ்வாறான பொங்குதமிழ் நிகழ்வுக்கு இயலும் போதெல்லாம் அரசாங்கம் ஆதரவு வழங்க வேண்டும்.

பொங்குதமிழ் நிகழ்வு விடுதலைப் புலிகளினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வு என்றாலும், விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிமுறைக்கு வந்தமை அரசாங்கத்திற்குக் கிடைத்த பெரிய வெற்றியாகும். ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பற்றி அனைவரை

விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கும் அவர்கள் ஜனநாயக அமைப்பாக மாறுவதற்கும அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அபயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை வவுனியாவில் இடம் பெற்ற பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவின் கூட்டத்தில் பங்கு பற்றிய அரச ஊழியர்களை படைத்தரப்பினர் விசாரணைக்குட்படுத்த முயன்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)


உங்கள் வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்




*கண்டி யாத்திரைக்கு ஒப்பாக காலி யாத்திரை
*மும்பையில் குண்டு வெடிப்பு அயோத்தி அல்லாவுக்கா? இராமருக்கா?
*கவனிப்பாரற்ற பொற்பதிக் கிராமம்.
*காலம் கடத்தும் கபட நாடகம்.
*வியாசரின் பதில்கள்.
*செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
*பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00

சங்குநாதம்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.